19.	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1)(இ) பந்தியின் பிரகாரம் நடைமுறை ஆண்டிற்கான பாதீடு செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியதுடன் அதன் பிரதி அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அனுப்பிவைக்கப்படாது ஆண்டின் போது ரூபா 28,164,693 செலவு செய்யப்பட்டிருந்தது.	2022	பாதீட்டிற்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொளப் படுதல் வேண்டும்.	நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2021 ஆம் ஆண்டிலிருந்து பாதீட்டினை திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கவில்லை.

3.4 கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம்

	மொத்தச் சொத்துக்கள் ரூபா (ரூபா)	மொத்தப் பொறுப்புக்கள் ரூபா (ரூபா)	உரிமை ரூபா (ரூபா)	வரிக்கு முன்னர் இலாபம்/ (நட்டம்) ரூபா (ரூபா)	அபிப்பிராயம்
2021	636,238,296	4,708,981,776	(4,072,743,480)	(427,806,224)	முனைப்பழியுள்ள
2022	663,412,060	5,140,628,886	(4,477,216,826)	(406,060,646)	முனைப்பழியுள்ள
2023	794,865,150	5,695,621,088	(4,900,755,938)	(425,104,832)	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள்	கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சிபாரிசினை அமுல்ப்படுத்தும் நிலைமை
01	ஓய்வூதிய பொறுப்பு ரூபா 5,532,349,026 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான முதலீட்டுப் பெறுமதி ரூபா 793,308,692 ஆக இருந்ததனால் இக்கடப்பாட்டினைத் தீர்த்துவைப்பதற்கு போதிய முதலீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	2023	ஓய்வூதிய பொறுப்பினைத் தீர்த்தவைப்பதற்கு போதியளவு முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.	நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	முதலீடு செய்யப்பட வில்லை.
02.	திட்டத்தின் மொத்த தேறிய சொத்துக்கள் தொடர்ச்சியாக மறைப்பெறுமதியினைக் கொண்டிருந்ததன் அடிப்படையில் திட்டத்தின் முழுச் சொாத்துக்களும் தேறப்படாததனால்	2023 2022 2021	திட்டத்தின் மொத்த தேறிய சொத்துக்கள் தொடர்ச்சியாக மறைப் பெறுமதியாகுவதனைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்	நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	தேறிய சொத்துக்கள் மறைப் பெறுமதியாகுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

	முழுப் பொறுப்புக்களையும் தீர்த்துவைப்பதற்கு முடியாததன் அடிப்படையில் திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருப்பது சச்சரவான விடயமாகும்.		வேண்டும்.		
03	1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் பிரகாரம் 18 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட ஒரு கடற்றொழிலாளருக்கு இந்த கடற்றொழில் ஓய்வூதியத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு தகமை இருந்தும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் எந்தவொரு அங்கத்தவரும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.	2023 2022 2021	திட்டத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்கு புதிய அங்கத்தவர்கள் சேரத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.	புதிய கடற்றொழில் ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	புதிய அங்கத்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.
04	1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற பங்களிப்பாளர்களுக்கு 60 வயதினைப் பூரணப்படுத்துகையில் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2007 சனவரியிலிருந்து 2016 திசெம்பர் வரையான காலத்திற்காக	2023 2022 2021	திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற பங்களிப்பாளர்களுக்கு 60 வயதினைப் பூர்த்திசெய்கையில் ஓய்வூதியத்தினை வழங்கும் வேலைத்திட்டத்தினை தயாரித்தல் வேண்டும்.	60 வயது பூர்த்தியான பங்களிப்பாளர்களின் பட்டியல் மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு கடற்றொழில் மற்றும் நீதரியல் வளங்கள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி பத்திரிகை மூலம் கடற்றொழிலலாளர்களுக்கு தெரியப்படுத:துவேன்.	60 வயது பூர்த்தியாகுகையில் ஓய்வூதியத்தினை வழங்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்படவில்லை.

	ஓய்வூதியம் வழங்கிய 139 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 4,159,063 தொகை மற்றும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது ஓய்வூதியம் வழங்கிய 45 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 1,378,518 ஆக மொத்தமாக ரூபா 5,537,581 நிலுவையான ஓய்வூதியமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் கடற்றொழிலாளர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.				
05	1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் தொடர்ச்சியாக பத்து தவணைப் பணங்களுக்கு முறைப்படியாக பணத்தை செலுத்தாதன் அடிப்படையில் பங்களிப்பாளர்கள் பிரதிபலன்களை இழப்பது சம்பந்தமாக பங்களிப்பாளர்களுக்கு தெரிவித்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பங்களிப்பு பணத்தை சேகரித்தல் மற்றும் அறிக்கையிடுதல்	2023 2022 2021	ஒரு பங்களிப்பாளருக்கு பிரதிபலன் இழக்கப்படுவது சம்பந்தமாக பங்களிப்பாளருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.	நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பிரதிபலன் இழக்கப்படுவது சம்பந்தமாக பங்களிப்பாளருக்கு தெரியப்படுத்தப்படவில்லை.

	நடைமுறை இல்லாததனால் தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்படவில்லை.				
06	1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஆலோசனைக் குழு 2016 நவம்பர் மாதத்தின் பின்னர் இன்று வரை கூடியிருக்கவில்லை.	2023 2022 2021	கடற்றொழில் ஓய்வூதிய ஆலோசனைக் குழு கூட்டப்படுதல் வேண்டும்	2024 ஆம் ஆண்டில் ஆலோசனைக் குழுவினைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	ஆலோசனைக் குழு கூட்டப்படவில்லை.
07	2023 சனவரி 27 ஆந் திகதிய 01/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 02(இ)(iii) ஆம் பந்தி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரித்த ஆளணி நடைமுறை இல்லாது 04 உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய பிரிவில் பதில் கடமை படியாக ரூபா 557,736 செலுத்தப்பட்டிருந்தது.	2023	முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த ஆளணி நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும்.	இக்கொடுப்பனவிற்கான கடற்றொழில் ஓய்வூதிய ஆலோசனைக் குழுவின் பணிப்பாளர் சபையின் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டது.	அங்கீகரித்த ஆளணி நடைமுறை தயாரிக்கப்படவில்லை.
08	திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற கடற்றொழிலிலாளர்களின் எண்ணிக்கை 64,117 ஆக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் பின்னர் எந்த அங்கத்தவரும் சேரத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2023	60 வயதினைப் பூர்த்தியடைகையில் கொடுப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	60 வயது பூர்த்தியான பங்களிப்பாளர்களின் பட்டியல் மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி கடற்றொழில் மற்றும் நீரியல்	60 வயது பூர்த்தியாகுகையில் ஓய்வூதியத்தினை வழங்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட

	கடற்றொழிலாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 வயதினை மிகைத்து ஓய்வூதிய வயதிற்கு வந்துள்ள 31,146 கடற்றொழில் பங்களிப்பாளர்களில் 24,187 பங்களிப்பாளர்களுக்கு (ஒரே தடவையில் பங்களிப்பு பணத்தை செலுத்தி பங்களிப்பினை பெற்றுக்கொண்ட 5,549 பங்களிப்பாளர்களையும் உள்ளடக்கி) கடற்றொழில் ஓய்வூதிய பிரதிபலன்கள் வழங்கப்படவில்லை.			வளங்கள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி பத்திரிகை அறிவித்தலின் மூலம” கடற்றொழிலாளர்களுக்கு தெரியப்ப	வில்லை.
09	2010 ஆம் ஆண்டிலிருந்து கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம், விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்திற்கு பல சந்தர்ப்பங்களில் அத்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக ரூபா518,000,000 கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அதில் அறவிட வேண்டிய கடன் மற்றும் வட்டிப் பணம் ரூபா 248,129,566 மொத்த தொகை இன்னும் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டது	2021	கடனையும் வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இப்பணத்தை படிப்படியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	கடனையும் வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3.5 புத்தசாசன நிதியம்

	மொத்தச் சொத்துக்கள் ரூபா (ரூபா)	மொத்தப் பொறுப்புக்கள் ரூபா (ரூபா)	உரிமை ரூபா (ரூபா)	வரிக்கு முன்னர் இலாபம்/ (நட்டம்) ரூபா (ரூபா)	அபிப்பிராயம்
2021	845,241,465	7,821,063	837,420,402	17,674,593	முனைப்பழியுள்ள
2022	-	-	-	-	-
2023	-	-	-	-	-

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை
1	காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 13,031,828 ஆன பெற வேண்டிய முற்பணம் மற்றும் ஏனைய பெற வேண்டியவைகளின் காசு மீதியில் ரூபா 1,087,447 தொகை 09 வருடங்களாகவும் மற்றும் ரூபா 11,944,381 தொகை 06 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாகவும் இருந்தமை கடந்த ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன் உரிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	2021	உரிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அந்த மீதிகளை அறவிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.	2024 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப் பட்டிருக்கவில்லை.
2	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 877(1)(இ) இன் பிரகாரம்	2022 மற்றும் 2023	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை	2023 இன் பாதீடு திறைசேரியின் அங்கீகாரத்திற்காக 2023.10.25	2024 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் 2023 ஆம் ஆண்டிற்கான

	அடுத்துவரும் ஆண்டின் பாதீடு திறைசேரியால் அங்கீகரித்துக் கொள்வதற்காக நடப்பாண்டின் செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் பாதீடு அங்கீகாரத் திற்காக சமர்ப்பிக்கப்படாதிருந்தது டன் 2023 இன் நிதியாண்டிற்குரிய பாதீடு திறைசேரி அங்கீகாரத்திற்காக 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.		எடுத்தல் வேண்டும்.	ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட போதும் இன்னும் அங்கீகாரம் கிடைக்காமையி னால் அது தொடர்பாக திறைசேரிக்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	பாதீடு அங்கீகரிக்கப்பட்டி ருக்க வில்லை.
3	2023 ஆம் ஆண்டின் போது ரூபா 180,891,411 தொகை நிதியத்தின் வருமானமாகக் கிடைத்திருந்த போதிலும் அதில் ரூபா 51,573,122 அதாவது 29 சதவீதம் மாத்திரம் நிதியத்தின் நோக்கங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. புத்தசாசனத்தை பாதுகாத்தல் மற்றும் போசித்து வளர்த்தல், சபையினால் பொருத்தமானது எனக் கருதுகின்ற முறையில் மற்றும் அவ்வாறு கவனத்திற் கொள்ளப்படுகின்ற பணிகளுக்காக நிதியினை ஈடுபடுத்துதல் நிதியத்தின் பணிப்பொறுப்பாக இருந்த போதிலும் வருடாந்தம் நிதியத்திற்கு கிடைக்கின்ற வருமானத்திற்கு சமமான வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நிதியம் தவறியிருந்தது.	2022 மற்றும் 2023	நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்க ாக போதியளவான பிரகாரம் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும்.	2023 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் அடிப்படையில் வங்கி வட்டி வீதம் உயர்வடைந்து சென்ற நிலைமையின் காரணமாக நிதியத்திற்குச் சொந்தமான வருமானம் ரூபா 180 மில்லியன் அளவில் காணப்பட்ட போதும் 2024 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 92,535,694 மாத்திரமாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் நாட்டின் அபிவிருத்தி	2024 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டி ருக்க வில்லை.

				செயற் திட்டங்கள் குறைவாக அமுல் படுத்தப்பட்டிருந்த துடன் அதன் படி 2024 ஆம் ஆண்டில் இந்த மிகையினைக் கவனத்தில் கொண்டு செயற் திட்டத்திற்கான கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
4	2019 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 2024 மார்ச் 01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டின் பின்னர் நிதியத்தின் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.	2021, 2022 மற்றும் 2023	பதில் பிழையானதாகும். 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமையால் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கணக்காய்வு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்கான நிதியத்தின் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப் பட்டுள்ளது என.	2024 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை.

3.6 இந்து கலாசார நிதியம்

	மொத்தச் சொத்துக்கள் ரூபா	மொத்தப் பொறுப்புக்கள் ரூபா	உரிமை ரூபா	வரிக்கு முன்னர் இலாபம்/ (நட்டம்) ரூபா	அபிப்பிராயம்
2021	39,392,353	-	39,392,353	2,221,118	முனைப்பழியற்ற
2022	48,490,086	-	48,490,086	9,097,733	முனைப்பழியற்ற்
2023	55,289,584	-	55,289,584	6,989,419	முனைப்பழியற்ற்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை
1.	1985 இன் 31 ஆம் இலக்க இந்து கலாசார நிதியச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் 2(l) இன் உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளின் பிரகாரம் மானியம், பரிசுகள் மற்றும் நன்கொடை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) என்ற வழிகளிலிருந்து ஆண்டில் நிதியத்திற்குக் கிடைக்கின்ற நிதியத்தை அதிகரிக்கச் செய்தல், பணிப்பாளர் சபையின் பணியாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் அதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2023	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	புதிய அலுவலகத்திற்கு வருகை தரும் செயற்பாடுகள் மற்றும் கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது என.	தற்போது வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரையின் பிரகாரம் நிதியத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.	1985 இன் 31 ஆம் இலக்க இந்து கலாசார நிதியச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் 11 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான நடைமுறைகளை ஒழுங்குபடுத்துதல் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்காக ஒரு பணிப்பாளர் சபைக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய பிரகாரம் ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கைகள் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் ஆண்டிற்காக நடாத்தப்பட வேண்டிய ஆகக் குறைந்த கூட்டங்களின் எண்ணிக்கையை உள்ளடக்கி சட்டத்தை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2023	குறித்துரைத்த பிரகாரம் நிருவாக சபைக் கூட்டங்களை நடாத்துவதன் மூலம் நிதியத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.	எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது என.	2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் 2024 ஆம் ஆண்டிற்காக ஒரு நிருவாக சபைக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.
3.	2023 ஆம் ஆண்டின் போது ரூபா 20,600,000 நிதி ஏற்பாட்டின் மூலம் அமுல்படுத்துவதற்கு எதிர் பார்க்கப்பட்ட இந்து கல்விசார் மற்றும் கலாசார நிகழ்ச்சித்திட்டங்கள் 11 மற்றும் ரூபா 1,000,000 நிதி ஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்துவதற்கு	2023	செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.	புதிய அலுவலகத்திற்கு வருகை தரும் நடவடிக்கைகள் மற்றும் கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு	2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் 2024 ஆம் ஆண்டிற்குரிய எந்தவொரு நிகழ்ச்சித்திட்டமும் அமுல்படுத்தப்படடிருக்கவில்லை.

	எதிர்பார்க்கப்பட்ட மலைநாட்டு தொழிலாளர் சமூகத்திற்கான இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.				குறிப்பிடப்பட்டுள்ளது என.
4.	கொடி தின வருமானம் ரூபா 3,000,000 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் நிதி உதவி ரூபா 4,000,000 மற்றும் கலை நிகழ்ச்சிகள் சார்ந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் ரூபா 2,000,000 ஆக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான வேலைத்திட்டமொன்று தயாரிக்காமையின் காரணமாக அந்த வருமானம் முழுமையாகவும், எதிர்பார்க்கப்பட்ட புத்த விற்பனை வருமானமான ரூபா 2,800,000 தொகையில் ரூபா 1,310,424 தொகை அதாவது 47 சதவீதத்தையும் உழைப்பதற்கு முடியாதிருந்தது.	2023	எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் வருமானங்களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக கொடி தினம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் சார்ந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது என.	2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் 2024 ஆம் ஆண்டிற்குரிய எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.7 திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கை நிதியம்

	மொத்தச் சொத்துக்கள் ரூபா	மொத்தப் பொறுப்புக்கள் ரூபா	உரிமை ரூபா	வரிக்கு முன்னர் இலாபம்/ (நட்டம்) ரூபா	அபிப்பிராயம்
2021	18,919,832	92,183	18,827,649	113,069	முனைப்பழியுள்ள்
2022	18,211,863	76,095	18,135,768	225,556	முனைப்பழியுள்ள்
2023	-	-	-	- -	

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்குட்படு நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள்	அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் தற்போதைய நிலைமை
1	2022 ஜூலை மாதத்தின் போது முதலீட்டு வட்டி வீதம் உயர்ந்திருந்த போதும், 2022 ஜனவரி மாதம் முதல் திசம்பர் வரையான காலப் பகுதியில் தோரமாக ரூபா 02 மில்லியன் வரை மிகையான மீதியாக நடைமுறைக் கணக்கில் தேக்கி வைத்திருந்தமையால் பெறக்கூடிய வட்டி வருமானம் நம்பிக்கை நிதியம் இழந்து விட்டது.	2022	நம்பிக்கை நிதிய சபையின் முறையான அனுமதியுடன் நிதியத்துக்குரிய மிகையான பணத்தை விரைவாக முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	நம்பிக்கை நிதிய சபை அனுமதி கிடைக்காமை இதற்கு காரணமாக உள்ளதுடன், எதிர்காலத்தில் முறையான அனுமதிக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	2024 ஆம் வருடத்திலேயும் நிலைமை அவ்வாறாகவே உள்ளது.
2	1986ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு தேசிய திரைப்பட கூட்டுத்தாபன பொறுப்பு நிதிய சட்டத்தின்				

(i) 06 வது பிரிவின் பிரகாரம் நம்பிக்கை நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிதி வழங்கும் அலலது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆதாரங்களிடம் இருந்து பணமாக அல்லது பொருள் ரீதியாக வழங்கல், பரிசு அல்லது வெகுமதிகளாக ஏற்கப்படலாம். இதில் எந்தப் பணிகளும் மேற்கொள்ளப்பட மையால் திறைசேரிக்கு செலவு சுமையாக மாறி இருந்தது.	2022	நம்பிக்கை நிதியத்தின் நோக்கங்களை அடைவதற்கு வருமானம் ஈட்டும் புதிய வழி வகைகளை கண்டறிந்து நிதி நிலையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்	நம்பிக்கை நிதியத்தின் நோக்கங்களை செயற்படுத்துவதற்காக திட்டங்களை செயற்படுத்துவதில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்களினால் எதிர்பார்த்த நோக்கங்களை அடைவதற்குரிய புதிய வேலைத் திட்டங்கள் அல்லது செயற்பாடுகள் நடைமுறைப் படுத்துவதற்கு முடியாதிருந்தது. புதிய பொறுப்பு நிதிய குழுவொன்று நியமிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் இது தொடர்பான கவனத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	புதிய வருமானங்களை ஈட்டும் வழிவகைகளை செயல்படுத்துவதற்கு நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கு சந்தர்ப்பம் ஒன்று இல்லை என்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
(ii) 03(1)வது பிரிவின் பிரகாரம் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் நிறுவப்பட்ட பொறுப்பு நிதிய குழுவிடம் ஒப்படைக்கப்படுமென றிப்பிடப்பட்டிருந்தாலும், 2012 நவம்பர் 30 திகதி முதல் 2021 ஜூலை 06 திகதி வரை 08 ஆண்டுகளும் 07 மாதங்களிற்கு கிட்டிய காலத்திற்காக நம்பிக்கைப்	2021 2022	கூட்டங்கள் முறையாக நடாத்தப்பட வேண்டும் என்பதுடன் பொறுப்புச் சபை நம்பிக்கை நிதியத்தின் முன்னேற்றத்துக்கு தொடர்ந்து பங்களிப்பு செய்தல் வேண்டும்.	நிரழ் அமைச்சு மாற்றப்பட்டதன் அடிப்படையில் அதற்கு சமமாக புதிய பொறுப்புச் சபை நியமிக்கப்பட்டதன் பின்னர் 2023 மார்ச் 31ஆந் திகதி நம்பிக்கை நிதியத்தின் 88வது சபைக் கூட்டம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	2023 மார்ச் 31 ஆம் திகதிக்கு பின்னர் 2024.01.19, 2024.09.19 ஆகிய திகதிகளில் 89, 90, 91 ஆகிய நம்பிக்கை சபை கூட்டங்கள் இடம்பெற்றிருந்தன.

			பொறுப்புச் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லையென்பதுடன் 2021 திசம்பர் 31ஆந் திகதி நடைபெற்ற 87வது பொறுப்பு நிதிய குழுக் கூட்டத்தின் பின் 2023 மார்ச் 31ஆந் திகதி வரை ஒரு வருடத்துக்கும் அதிகமான காலம் பொறுப்பு நிதிய குழுக் கூட்டம் நடைபெறாத காரணத்தினால் பொறுப்பு நிதியத்தின் மேம்பாட்டிற்கு எந்தவிதமான செயலூக்க பங்களிப்பும் வழங்கப்பட வில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		
3	ரணசிங்க பிரேமதாஸ நினைவு நம்பிக்கை நிதியத்தின் சார்பாக 2019 ஜனவரி மாதத்தில் பெறப்பட்ட வரவு வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 1,000,000 தொகையானது, தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம் எனும் பெயரில் நிலையான வைப்புத் தொகையில் முதலீடு செய்யப்பட்டு வட்டி வருமானம் கிடைத்த பின் 2022 ஜூன் மாதம் 06ஆந் திகதி கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கை நிதியத்துக்கு மாற்றப்பட்டதுடன், நம்பிக்கை நிதியத்தினால் இத்	2022	இந்த நம்பிக்கை நிதியம் நிறுவப்பட்ட நோக்கம் அல்லது பணிகளை முன்னெடுப்பது தொடர்பாக தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் தாமதமின்றி முதலீடு செய்தல் வேண்டும்.	2021.07.06 ஆந் திகதி இடம்பெற்ற 86வது பொறுப்பு நிதிய குழுக் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம் இத்தொகையை நம்பிக்கை நிதியத்தில் நிலையான வைப்பு பேனிச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.	திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்ப வல்லுனர்களுக்காக வல்லுனர்களுக்கான தேசிய திரைப்பட கூட்டத்தாபனத்தின் நம்பிக்கை நிதியத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு முதலிடப்பட்டுள்ளது. எதிர்வரும் நம்பிக்கையாளர் சபை கூட்டத்தின் போது அதனூடாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் தீர்மானிக்கப்படுவத

	தொகை 2022 ஆகஸ்து 08ஆந் திகதி வரை 02 மாத காலம் வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்பிட்ட பின் ஒரு வருட காலத்துக்கு நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் இந்த நம்பிக்கை நிதியம் நிறுவப்பட்ட நோக்கம் அல்லது பணிகளை முன்னெடுப்பதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை.				ாக குறிப்பிடப்பட்டுள்ள து.
4	றுக்மணி தேவி நிதியம், நிறுவப்பட்ட நோக்கம் அல்லது பணிகள் என்ன வென்பது குறித்த தகவல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வில்லை என்பதுடன் ரூபா 462,778 அந்த நிதியிலிருந்து எந்தப் பணிகளும் மேற்கொள்ளப்படாது நிதி நிலைக் கூற்றில் பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் கீழ் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.	2021 2022	இந்த நிதியத்தை நிறுவுவது தொடர்பான நோக்கம் பற்றி ஆராய்ந்து பார்த்து அதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.	இது தொடர்பான மீண்டும் நம்பிக்கை நிதிய சபை கவனத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	எதிர்வரும் நம்பிக்கை நிதிய சபை கூட்டங்களின் போது இது தொடர்பாக தீர்மானங்கள் மேற்கொள்ளப்படு வதாக குறிப்பிடப்பட்டுள்ள து.
5	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு மேற்கொள்வதற்கு நம்பிக்கை பொறுப்பு சபையினால் உள்ளக கணக்காய்வாளர்	2021 2022	தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.	கூட்டுத்தாபனத்தில் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவறை நியமிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ள்ளதுடன் அந்த நியமனம்	2024 செப்டம்பர் 30ஆம் திகதியிலும் கணக்க ஆய்வாளர் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டு இருக்க வில்லை ..உள்ளக

	ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		இடம்பெற்றவுடன் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	
6	கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு நிறுவப்பட்டு கணக்காய்வு திகதிக்கு ஏறக்குறைய 37 ஆண்டுகள் கடந்துள்ளதுடன் நம்பிக்கை பொறுப்பு அதே ஆரம்ப நிலையில் அல்லது குறைந்த செயற்பாட்டு மட்டத்தில் நம்பிக்கை பொறுப்பின் செயற்படுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கிடையில் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போதுள்ள பொருளாதார நிலைமைக்கு ஏற்ப ஓய்வூதியத்தை நாளாதுவரையாக்கல், பொறுத்திருப்பு பட்டியலிலுள்ள ஓய்வூதியதாரர்களுக்கு விரைவில் ஓய்வூதியம் வழங்க மற்றும் நலன்புரி மருத்துவ வசதிகள் வழங்குதல் போன்ற எந்தப் பணிகளையும் நம்பிக்கை பொறுப்பினால் செயயப்படாதமை	2021	நிதியத்தின் நிதி நிலைமையை முன்னேற்றிக் கொள்ளவும் நம்பிக்கை பொறுப்பின் நோக்கங்களை நிறைவேற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.	போதிய அளவு நிதி ஏற்பாடுகளை பொது திறை சேரியிடமிருந்து பெற்றுக் கொண்ட பிறகு செலுத்தப்பட்ட கொடுப்பனவு ரூபா 5,000 வரை அதிகரிக்கப்பட்டதுடன் பொறுத்திருப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து தகுதியானவர்களுக்கும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் கூட்டு த்தாபன நம்பிக்கை நிதியத்தில் முதலீடு செய்வதனால் கிடைக்கப்பெறுகின்ற வருடாந்த வட்டி தொகையிலிருந்து சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மரண உதவி மற்றும் வைத்திய உதவிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	பொறுத்திருப்பு பட்டியல் படுத்தப்பட்ட அனைத்து தகுதியாளர்களான திரைப்பட கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு மாதாந்தம் ஓய்வூதிய சம்பளக் கொடுப்பனவு வழங்குவதற்காக நம்பிக்கையாளர் சபை நடவடிக்கை மேற்கொண்டிருந்த போதிலும் மரண உதவிகள் மற்றும் வைத்திய உதவிகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அவதானிக்கப்பட்டது.

7	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின 1ஆம் தொகுதியின் 15.1 பிரிவினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) க்கு முரனாக கூட்டுத்தாபன நம்பிக்கை நிதியத்தின் 2022 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் ஓராண்டு தாமதத்தின் பின்னர் 2024 ஏப்ரல் 17 திகதி கணக்காய்வுக்கு சமர்ப்பித்திருந்ததுடன் அதனோடு செயலாற்றல் அறிக்கையொன்றை சமர்ப்பித்திருக்கவில்லை .	2022 2021	சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை உரிய திகதியில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.	2021.12.31ஆந் திகதிய இறுதி வருடத்துக்கான நிதிக் கூற்றுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு அமைவாக 2022.12.31ஆந் திகதிய இறுதி வருடத்துக்கான நிதிக்கூற்று தயாரிப்பதற்கான அனுமதிக்கு பொறுப்புச் சபைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளது.	2023 ஆம் வருடத்துக்கான நிதி கூற்றும் 2024 செப்டம்பர் 30ஆம் திகதியிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டில்லை என்பதுடன் தாமதக் காலம் 7 மாதங்கள் ஆகும்.

3.8 தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம்

	மொத்தச் சொத்துக்கள் ரூபா	மொத்தப் பொறுப்புக்கள் ரூபா	உரிமை ரூபா	வரிக்கு முன்னர் இலாபம்/ (நட்டம்) ரூபா	அபிப்பிராயம்
2021	129,364,050	1,832,404	127,531,646	4,000,099	முனைப்பழியுள்ள
2022	145,568,176	1,860,404	143,707,772	12,976,126	முனைப்பழியுள்ள
2023	167,170,550	2,572,436	164,598,114	20,890,342	முனைப்பழியற்ற

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வுக்குட்படு நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள்	அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் தற்போதைய நிலைமை
1	நிதியத்தின் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரைப்பட தயாரிப்பு கடன், திரையரங்கு கடன் மற்றும் கொவிட் -19 திரையரங்கு கடன் அடங்கலாக மொத்தம் ரூபா 71,648,272 தொகையான மீதியினுல் 05 வருடங்களைத் விஞ்சிய கடன் மீதி ரூபா 71,024,268 ஆக இருந்ததுடன், இதில் ரூபா 64,602,413 20 வருடங்களைத் தாண்டி இருந்தது. கைத்தொழில்	2021 2022 2023	பழைய நிலுவைகளை அறவிடுவதற்கு உயர் முகாமைதத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	திரையரங்குகள் நவீன தொழில்நுட்பத்துடன் ப்ரரொக்ஸென் நடவடிக்கை மேற்கொள்வதால் 35mm சினிமாவை காட்சிப்படுத்து-வதற்கான வாய்ப்பும் குறைந்துள்ளதுடன், இந்த படங்கள் 35mm சினிமாவாக இருப்பதால் மீள் காட்சிப்படுத்தி கடன் அறவிடும் சாத்தியமும் இழக்கப்பட்டுள்ளது. எதிர்காலதில் தொலைக்காட்சி அலைவரிசை மற்றும் யுட்யுப்	2024 செப்டம்பர் 30ஆம் திகதியான போதிலும் நீண்ட கால நிலுவை கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கு போதுமான அளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

	சரிவடைதல் மற்றும் முகாமைத்துவம் கடன்களை அறவிடுவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்காமை போன்ற நிலைமையின் மீது அத் தொகையை அறவிட முடியாமலிருந்தது. மொத்த கடன் பட்டோர் மீதியில் 93 சதவீதமான ரூபா 67,177,716 இனை ஐயக்கடன் ஒதுக்கம் செய்யப்பட்டிருந்த து. கடந்த ஆண்டு கணக்காய்வு விசாரணையின் மூலம் இது தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்டது. ஆனால் மீளாய்வாண்டில் நடைபெற்ற நிர்வாக சபை கூட்டத்திலும் இந்த அறவிடப்படாத கடனை அறவிடுவது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படவில் லை.			அலைவரிசை மூலம் படங்களை காட்சிப்படுத்துவதற் கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
2	2023 திசம்பர் 31இல் உளளவாறு இலங்கை தேசிய திரைப்பட	2021 2022 2023	கூட்டுத்தாபனம் பெற வேண்டிய நிலுவைத் தொகைளை அறவிடுவதற்கு	வேகந்த வலவ்வ மற்றும் நிசலகிர திரைப்படத்துக்கு வருமானம் ஈட்ட முடியவில்லை	தற்போதும் கூட கணக்காய்வினால் பரிந்துரைக்கப்பட்டதன் பிரகாரம் கூட்டுத் தாபனிடமிருந்து

	கூட்டுத்தாபனத்தின் மூலம் நிதியத்துக்கு கிடைக்கப் பெற வேண்டிய வாடகை பங்களிப்பு ரூபா 26,393,457உம், திரைப்படத் திரையிடல் வருமானத்தில் இருந்து பெற வேண்டிய ரூபா 3,532,156உம், அடங்கலான மொத்தம் ரூபா 31,523,282 வான மீதியினுல் ரூபா 23,002,208 தொகை 05 வருடங்களை கடந்திருந்த போதிலும், முகாமைத்துவத்தினால் இப்பணத்தை உடனடியாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	ஆதலால், இந்த நிலுவைத் தொகையை அறவிடுவது முடியாத விடயமாக உள்ளது. எதிர்காலததில் தொலைக்காட்சி அலைவரிசியின் ஊடாக காட்சிப்படுத்தி வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கிடைக்கப் பெற வேண்டிய வாடகை பணத்தை அறவிட்டிருக்கவில்லை.
3	நிதியத்தின் மீளாய்வாண்டில் வைப்பு வட்டி வருமானம் ரூபா 20,507,972 ஆக இருந்தபோது நிதியத்தின் பிரதான வருமானமாக திரைப்படத் தொழிலின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 2,281,047 குறைந்த மட்டத்தில் இருந்தது. திரைப்படத் தொழிலின் வீழ்ச்சியும், இந்த	2022 2023	நிதியில் பணத்தை முதலீடு செய்வதற்கு பதிலாக அந்த பணத்தை திரைப்படத் தொழிலின் வளர்ச்சிக்கு செலவிடுவதை உறுதி செய்ய வேண்டும்.	அமைச்சுக்கள் மாறியதனால் நிர்வாக சபை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இதன் காரணமாக தாங்கள் சுட்டிக் காட்டியுள்ள விடயங்களுக்கு பயனுள்ள செயற்பாடுகள் இடம்பெற்றிருக்க வில்லை.	தற்போதும் கூட தொழிற்சாலையின் அபிவிருத்திக்காக பணத்தை செலவிடுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

	தொழிலை மேம்படுத்துவதற்கு முதன்மை கவனமாக பணத்தை முதலீடு செய்தமையாலும் இந்த நிலைக்கு தள்ளப்பட்டதற்கு காரணமாக இருந்தது.				
4	மீளாய்வாண்டில் நிதியத்தினால் எந்தச் செலவும் மேற்கொள்ளப்படா திருந்ததுடன், 1996 ஒக்தோபர் 24ஆந் திகதிய 946/9ஆம் இலக்க விசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட 1971ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 61வது மற்றும் 05வது பந்தியின் கீழான கட்டளையின் பிரகாரம் முன்னெடுக்கப்பட வேண்டிய எந்த பணிகளையும் நிதியத்தினால் செயற்படுத்தப்படா திருந்தது. 2023 திசம்பர் 31ஆந் திகதிக்கு உள்ளவாறு ரூபா 10,759,729 வங்கி மீதியொன்று நிதியத்திடம் காணப்பட்டதுடன் ஜனவரி முதல் திசம்பர் வரையான 12 மாத காலப் பகுதிக்குள் ரூபா 05 மில்லியனுக்கு குறையாத மாதாந்த வங்கி	2021 2023	நிதியத்தை நிறுவும் நோக்கத்திற்காக பணம் பயன்படுத்தப்ப ட வேண்டும்.	காசோலை கையொப்பம் இடுவதற்கான அதிகாரம் மாற்றப்பட்ட பின் 2024ஆம் ஆண்டில் நிர்வாக குழுவின் அனுமதியின் பேரில் ரூபா 08 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.	2024 ஜூலை 04 ஆம் திகதி ரூபா 08 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுட ன் கட்டளையின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய எவ்வித பணி ஒன்றுக்காகவும் செலவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக் க வில்லை.

	மீதி இருப்பை பயன்படுத்தாமல் நடைமுறைக் கணக்கில் விளைவற்று வத்திருந்த காரணத்தினால் மிகை பணத்தை முதலீடு செய்து பெறக்கூடிய வட்டி வருமானத்தை நிதியம் இழந்துள்ளது.				
5	1996 ஒக்தோபர் 24ஆந் திகதிய 946/9ஆம் இலக்க விசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட 1971ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 61வது மற்றும் 05வது பந்தியின் கீழான கட்டளையில் நிர்வாக சபைக் கூட்டங்கள் எப்படி நடாத்த வேண்டும் எனக் குறிப்பிடப்படாமையால் 2023ஆம் ஆண்டில் ஒரு நிர்வாக சபைக் கூட்டம் மட்டும் நடாத்தப்பட்டதுடன், முன்னைய ஆண்டுகளிலும் இதே நிலைதான் இருந்தது. அதன் பிரகாரம், திரைப்பட கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந் நிதியம் நிறுவப்பட்டுள்ள	2022 2023	கட்டளைகளை திருத்தம் செய்ய கவனம் செலுத்த வேண்டும்.	நிர்வாக சபையின் ஆலோசனையின் பேரில் எதிர்காலத்தில் அபிவிருத்தி நிதியம் வர்த்தமானி திருத்தப்பட்டு முறையான பணியை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.	தற்போதிலும் கணக்காய்வின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

	போதும் கட்டுப்பாட்டு சபையினால் திரைப்பட கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக தொடர்ச்சியான பங்களிப்பொன்று வழங்கப்படவில்லை				
6	1996 ஒக்தோபர் 24ஆந் திகதிய 946/9ஆம் இலக்க விசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட 1971ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 61 மற்றும் 05வது பிரிவின் கீழான கட்டளையின் (4) (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ) மற்றும் (ஓ) வுக்கு அமைய பின்வரும் பணிகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2021 2022 2023	முகாமைத்தினால் சட்டத்தின் கட்டளைகளின் பிரகாரம் நிதியத்தின் பணிகளை முன்னெடுத்து செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	எதிர்காலத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களில் கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது.	புதிய நிர்வாக சபையொன்று நியமிக்கப்பட்டதன் பின்னர் திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் வர்த்தமானி பத்திர திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு தேசிய திரைப்பட தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
7	2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 15.1 மூலம் பிரசுரிக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1) (இ)	2022 2023	நிதியத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப பாதீட்டு ஆவணம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் இன்றி எந்தச்	வரவு செலவு ஆவணம் தயாரிக்கப்படவில்லை. 2023இல் அபிவிருத்தி நிதியத்திலிருந்து எதுவித கொடுப்பனவகளும் மேற்ளப்படவில்லை.	2024 செப்டம்பர் 30ஆம் திகதியிலும் பாதீட்டு ஆவணம் தயாரிக்கப்படவில்லையான போதிலும் ரூபா 191,868 செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மற்றும் (ஈ) பிரகாரம் நிதியத்தினால் 2023ஆம் ஆண்டுக்கு பாதீட்டு ஆவணம் சரிபார்க்கப்படவில்லை. அத்துடன் பாதீட்டு திட்டம் ஒன்றை தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது நிதியத்தின் செலவுகளை மேற்கொண்டிருந்தது	செலவும் மேற்கொள்ளலாகது.

3.9 நிர்மாணங்கள் உத்தரவாத நிதியம்

	மொத்தச் சொத்துக்கள் ரூபா ரூபா.	மொத்தப் பொறுப்புக்கள் ரூபா ரூபா.	உரிமை ரூபா ரூபா.	வரிக்கு முன்னர் இலாபம்/ (நட்டம்) ரூபா ரூபா.	அபிப்பிராயம்
2021	2,707,261,360	1,247,522,116	1,459,739,244	310,233,611	முனைப்பழியுள்ள
2022	2,600,464,086	853,145,475	1,747,318,611	285,269,552	முனைப்பழியுள்ள
2023	2,869,316,518	786,621,499	2,082,695,019	332,685,658	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள்	கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சிபாரிசினை அமுல்ப்படுத்தும் நிலைமை
01	**பெறவேண்டிய பணம்**				
(அ)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தினால் விலைப் பட்டியல்களை கழிவு செய்து ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்திய பணத்தில் தொழில் தருனர்களால் விலைப்பட்டியல்களுக்காக பணத்தை செலுத்தாமையால் தீர்த்துவைக்கமுடியாத ரூபா 10.30 மில்லியனாகும். அவற்றில் ரூபா 10.21 மில்லியன் அல்லது 98 சதவீதம் ஒரு ஒப்பந்த நிறுவனத்திடமிருந்தும் மிகுதியான 02 சதவீதம் அல்லது ரூபா 92,019 ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவீடு செய்வதற்கு	2021 2022 2023	விலைப்பட்டியல்களில் கழிவு செய்து கொடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து நிலுவைப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	விலைப்பட்டியல்கள் கழிவு செய்த செயற்திட்டங்களை அமுல்ப்படுத்திய ஒப்பந்தக்காரர்கள் சம்பந்தமான சிக்கல்கள் நடுவர் தீர்ப்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. உரிய கழிவு செய்தல்களும் அதன் மூலம் அறவீடு செய்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	ஒப்பந்தக்காரர்களிடமிருந்து நிலுவைப்பணம் இன்றுவரை அறவீடு செய்யப்படவில்லை.

முடியாதிருந்தது.

(ஆ)	நிதியத்தினால் எந்த பிணையும் வைக்கப்படாது நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களுக்கு பிணைகள் வழங்கப்பட்டதுடன் ஒப்பந்தக்காரர்களின் செயலாற்றல் குறைவடையும் சந்தர்ப்பங்களில் தொழில் தருனர்கள் பிணைப் பணத்தை நிதியத்திலிருந்து வேண்டிக்கொள்வார்கள். 2011 இலிருந்து 2019 வரையான 22 சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு ரூபா 87.65 மில்லியன் பணம் சேவை தருனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 4.67 மில்லியன் அறவிட முடியாது 2019 ஆம் ஆண்டின் போது நம்பிக்கைப் பொறுப்பு சபையின் அங்கீகாரத்துடன் பழிவழிக்கப்பட்டது. மேலும் 2020 இலிருந்து 2022 வரை தொழில் தருனர்களுக்குச செலுத்தி நிதியத்தினால் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 30.16 மில்லியனாகும். இதற்கு மேலதிகமாக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 26.67 மில்லியன் பிணையை நிதியம் பணமாக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்கிணங்க தொழில் தருனர்களுக்கு நிதியத்தினால்	2022 2023	ஒப்பந்தக்காரர்களின் செயலாற்றலினை மேம்படுத்துவது சம்பந்தமாக முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் நிதியத்தினால் அறவிட வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும்.	இதுவரை பிணைமுறியை பணமாக்குவதமற்காக செலவு செய்யப்பட்ட பணத்தை மீளளிப்புச் செய்வதற்கு தற்பொழுது அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிடத்தக்க அளவு பணத்தை செலவு செய்த நடைமுறைக்கு சில காலம் எடுத்திருந்தும் சாதகமான பெறுபேறு கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்த முயற்சிக்கு உங்களால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு இணங்க பொருளாதார ரீதியாக நியாயமான தீர்ப்பினை வழங்கும் வகையில் மேற்கூறிய நடைமுறை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. ஆதனத்தை தடை செய்வதற்காக நிதி ரீதியான கட்டளையை ஒப்படைப்பதற்கு முடியாதுள்ளதனால் இன்றுவரை தீர்த்துவைக்கப்படவில்லை.

செலுத்தப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 139.80 மில்லியன் தொகை 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் மீண்டும் நிதியத்தினால் அறவிடப்படாதிருந்தது. இது சம்பந்தமாக நடுவர் தீர்ப்பு நிதியத்திற்கு சாதகமாகக் கிடைத்திருந்தும் உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் இது சம்பந்தமான சட்ட நடவடிக்கைக்காக மீளாய்வாண்டின் போதும் ரூபா 0.85 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

02 செலுத்த வேண்டிய பணம்

(அ)	100,000 கிலோமீற்றர் கிராமிய வீதிச் செயற்திட்டத்தின் கீழான நிர்மாணக் கைத்தொழில்ளை மேற்கொள்கின்ற 314 ஒப்பந்தக்காரர்களின் சான்றுபடுத்தப்பட்ட விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக வீதிகள் மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சினால் 2020 இலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை நிதியத்திற்கு ரூபா 33,389 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 32,782.47 மில்லியன் ஒப்பந்தக்காரர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும் அப்பணத்தில் உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு விடுவிக்கப்படாத ரூபா 220.62 பணம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு	2021 2022 2023	இது சம்பந்தமாக தெளிவான நிபந்தனைகளை உள்ளடக்கி வீதிகள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுடன் உடன்படிக்கை அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் வைத்திருக்கும் பணத்தை உரிய காலத்தில்	தொழில்தருனர் உத்தரவாதம் தொடர்ச்சியாக இடம்பெறாததனால் செயற்திட்டங்களை இடைநடுவில் கைவிடுதல மற்றும் சில பிணைமுறிகள் சட்டரீதியான உத்தரவாதத்தினை மிகைத்துள்ள போதிலும் தொழில் தருனரும் ஒப்பந்தக்காரரும் செயற்திட்டம் தொடர்பான இரு தரப்பினர் உத்தரவாதம் இன்னும் கலந்துரையாடப்படுவதனால் முழுமையான மீளாய்வின் பின்னர் நிர்மாண உத்தரவாத நிதியம் தமது பொறுப்புக்களிலி	உத்தரவாத காலம் காணப்படுகின்ற ஒப்பந்தக்காரர்களின் ரூபா 220.62 மில்லியன் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

நிதியத்தினால் வழிக் காசுக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 88.10 மில்லியன் 01 ஆண்டிற்கும் 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகவும் ரூபா 3.43 மில்லியன் 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் வைக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இந்த வைக்கப்பட்டிருந்த பணத்தில் முழுமையாக வேலைகளைப் பூர்த்தி செய்திருந்த 123 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 60.55 மில்லியன் பணம் ஒப்பந்தக்க்காரர்களுக்கு விடுவிக்கப்படாது நிதியம் வைத்திருந்தது. மேலும் ஒப்பந்தக்கார்களுக்கு விடுவிப்பதற்காக ஏனைய பல்வேறு தரப்பினர்களால் நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்த பணத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு தீர்த்துவைக்கப்படாத பணம் ரூபா 27.77 மில்லியனாகும். இந்த மீதிகளின் மொத்தம் ரூபா 7.08 மில்லியன் மற்றும் ரூபா 11.89 மில்லியனான பணம் முறையே 01 ஆண்டிற்கும் 03 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மற்றும் 03 ஆண்டுகளுக்கும் 07 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள்ளானதுடன் உரிய செயற்திட்டங்களின் நிகழ்கால செயலாற்றல் போதியதாக இல்லாததன் காரணமாக நிதியத்தினால் திர்த்துவைத்தல் வேண்டும்.

ருந்து முழுமையாக விடுவிப்பு கிடைக்கும் வரை மட்டுப்படுத்தப்பட்ட பணத்தை நிறுத்திவைத்துள்ளது. இன்றுவரை வழிக்காசில் 97% இறகு மேற்பட்ட அளவானவை விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தரப்பினர்களின் மீளாய்வு முடிவடைந்ததன் பின்னர் எஞ்சியுள்ள காலத்தில் நிறுத்திவைத்துள்ள பணத்தை படிப்படியாக விடுவிக்க கூடியதாக இருக்கும்.

	வைக்கப்பட்டிருந்ததனால் இப்பணத்தை எதிர்காலத்தில் தீத்துவைப்பதற்கான பொறுப்பினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. இவ்வாறு ஒப்பந்தக்காரர்களின் விலைப்பட்டியல்களைத் தீர்த்துவைப்பதற்காக சேவைநாடுனர்களினால் வழங்கப்பட்டிருந்த பணத்தை வழிக்காசாக (Transit Money) நீண்டகாலப் பகுதியாக வைத்திருத்தல் சிக்கலுடையதாகும்.				
03.	**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ திர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**				
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41(1) ஆம் பந்தி நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமாக மீளாய்வு செய்து அறிக்கையிடுவதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் நிதியம் எத்திகதியிலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தினை நடாத்தியிருக்கவில்லை. அவ்வாறே நிதி அமைச்சின் அல்லது நிர்மாண அமைச்சின் பிரதிநிதிகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களுக்கு பங்குபற்றியிருக்கவில்லை .	2021 2022 2023	தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுதல் வேண்டும்.	நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியான மீளாய்விற்கும் உள்ளகக் கணக்காய்விற்கும் உற்படுத்துதல் தொடர்ச்சியாக இடம்பெறுவதுடன் முகாமைத்துவ குழுவின் மூலம் தேவையான அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொது முகமைத்துவ தீர்மானத்தின் அடிப்படையில் சரியாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் மேற்கொள்வதறகு அனைத்து சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை.

(ஆ)	1999 ஆகஸ்ட் 05 ஆந் தகிதிய நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 9(ஊ) ஆம் பிரிவு நம்பிக்கைப் பொறுப்பு சபைக்கு சம்பளம், படிகள் அல்லது கௌரவ சம்பளம் பெற்றுக்கொள்வதற்கு உரிமை இல்லாத போதிலும் அவர்கள் கடமையை நிறைவேற்றும் பொழுது மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளை மீளளிப்புச் செய்யலாம். எனினும் இதற்கு முரணாக நிதியத்தினால் சபையின் தொழில்சார் இயலுமையின் அடிப்படையில் மேலதிக சேவையில் ஈடுபடுவதாக கடமைகளை நிறைவேற்றுவதற்காக மாதாந்தம் ரூபா 50,000 வீதம் ஆன நிரந்தரப் பணமாக மொத்தமாக ரூபா 2.5 மில்லியன், ரூபா 2.3 மில்லியன் மற்றும் ரூபா 2.5 மில்லியன் முறையே 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நம்பிக்கைப் பொறுப்புச் சபையினால் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பான விபரம் நிதிக்கூற்றுக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. இந்த சம்பந்தப்பட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் மூலம் எந்த வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும் மேலும் அவதானிக்கப்பட்டது.	2021 2022 2023	நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் விடய இலக்கம் 07, 08 மற்றும் 11 ஆம் நடவடிக்கைகளுக்கு நேரடியாக கட்டுப்பட்டுள்ளது டன் அவர்களின் மேலதிக செயற்பாடுகள் அடையாளங்காணப்பட்டுள்ளது. அச்செயற்பாடுகளுகாக கடமைகளை நிறைவேற்றும் போது மேற்கொள்ளப்பட்ட செலவாக கருதுததல் வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பு சபையின் செயலாற்றலுக்காக நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 9(F) ஏற்பாட்டின் பிரகாரம் இச்செலவுகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.	நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க செலவுகள் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்காததுடன் மாதாந்தம் நிலையான ஒரு தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட நிதிப்பிரமாணம் 876(3) ஏதாவது நியதிச் சட்டம் இல்லாத ஒரு நிதியத்தினை தொடர்ந்தும் பேணுவதற்கு நியாயமான காரணம் இருக்குமாயின் அந்த நிதியத்தினை பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் சட்டமாக்குதல் வேண்டும். எவ்வாறாயினும் நிதியம் 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை இத் தேவைப்பாட்டிற்கு இணங்கியிருக்கவில்லை.	2021 2022 2023	நிதிப்பிமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இது சம்பந்தமாக நடுவராக திறைசேரி செயலாளர் பொருத்தமான சந்தர்ப்பத்தில் நடவடிக்கை எடுப்பார் என நிதியம் எதிர்பார்க்கின்றது.	இன்றுவரை பாராளுமன்ற அதிகாரச் சட்டத்தின் மூலம் சட்டமாக்குவதற்கு தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

04 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ)	நிதியத்திற்காக முகாமைத்துவ தகவல் முறைமையை (MIS) உருவாக்கி அபிவிருத்தி செய்வதற்காக நிதியத்தினால் 2015 ஆம் ஆண்டின் போது இலங்கை டெலிகொம் நிறுவனத்துடன் ரூபா 2.98 பெறுமதிக்கு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கைக்கு இணங்க முதலாவது தவணை மற்றும் அபிவிருத்தி செய்ததன் பின்னர் செலுத்த வேண்டிய இரண்டாவது தவணைப் பணமுமாக மொத்தமாக ரூபா 2.08 மில்லியன் அல்லது ஒப்பந்த பெறுமதியில் 70 சதவீதம் 2015 மற்றும்	2021 2022 2023	முகாமைத்துவ தகவல் முறைமையினை உடன்படிக்கையின் பிரகாரம் வெற்றிகரமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	2015 இலிருந்து ஆரம்பிக்கப்பட்ட முறைமையினை 2023 வரைக்கும் முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்த போதிலும் முதலாவது இணங்கிக் கொண்ட பணத்திற்கே தற்பொழுது நட்டம் ஏற்படாத வகையில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனக் காட்டப்பட்டிருந்தது.	2024 நடுப்பகுதி அளவில் சேவைகளில் 50% பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

	2016 ஆம் ஆண்டுகளின் போது உரிய நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அது நிதி நிலைமைக் கூற்றில் மென்பொருள் அபிவிருத்தி முற்பணமாக நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. பணம் செலுத்தி 08 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை இந்த முகாமைத்துவ தகவகவல் முறைமை (MIS) தயாரித்து முடிவடைந்திருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து செயற்பாட்டை பூரணப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போதும் நிதியத்திற்கு முடியாதிருந்தது.					
(ஆ)	நிதியம் 1999 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2000 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரையான காலத்தில் நான்கு சந்தர்ப்பங்களின் போது பொதுத்திறைசேரி ரூபா 55 மில்லியன் மானியத்தை வழங்கியிருந்தது. எனினும் வருடாந்த இலாபத்தினை பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கும் நடைமுறை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கு மத்தியில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 949.79 மில்லியன் தொகையான பிடித்துவைத்தல் உழைப்புக்களில் ரூபா 500 மில்லியன்	2022 2023	சுற்றறிக்கையின் பிரகாரம் உழைக்கப்பட்ட மிகை அல்லது மிகையின் ஒரு பகுதியை வருடந்தம் திறைசேரிக்கு அனுப்பிவைப்பதற்கான நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும்.	நிறுவனம் 25 ஆண்டுகள் காலம் மாதாந்த குத்தகை அடிப்படையில் பேணப்பட்டு வந்ததன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காகவும் தனக்கென்று ஒரு சேவை நிலையத்தினை நிர்மாணிப்பதற்கு நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 8(சீ) இலக்கத்தின் கீழ் அதிகாரம் கிடைத்துள்ளதனாலும் எங்கள் நிறுவனம் உழைத்த பணத்தில் அதற்காக நிதி	எந்த பணம் அனுப்புதலும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

					ஏற்பாடு ஒதுக்கீடு செய்தல் இடம்பெற்றுளது.
					‘‘உட்கட்டமைப்பு வசதிகளுக்கான நிதி ஏற்பாடு’’ என்ற பெயரிலான ஒதுக்க கணக்கிற்கு மாற்றப்பட்டு விளைவற்றுக் காணப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிடித்துவைத்த இலாபம் மற்றும் ஒதுக்கம் ரூபா 912.95 மில்லியனாக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நீண்டகால முதலீடு ரூபா 1,208.91 மில்லியனாகவும் குறுங்கால முதலீடு ரூபா 1,041.61 மில்லியனாகவும் இருந்தது.
(இ)	நிதியம் பிணைமுறி மற்றும் உத்தரவாத வருமானத்தினை (Bond and Guarantee Levey Income) கணிப்பீடு செய்யும் போது 100,000 கிலோமீற்றர் வீதிச் செயற்திட்டத்திற்காக பிணைமுறியின் பெறுமதியில் 2% மற்றும் 2.5% முறையே முற்பண பிணைமுறி (Advance Bond) மற்றும் செயலாற்றல் பிணை முறிக்காக (Performance Bond) அறவிடப்பட்டுள்ளதுடன் பிணைமுறிக்காக 1.5% மற்றும் 1.75% சதவீதமாக இருந்த போதிலும் அக்கட்டணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக விசேட முகாமைத்துவ அறிக்கையின் ஒரு பிரதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் நம்பிக்கைப் பொறுப்புச்	2021 2022 2023	நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரத்தினை போல முகாமைத்துவ குழுவினால் எடுக்கப்படுகின்ற தீர்மானம் பிணைமுறி மற்றும் உத்தரவாத வருமான கோவைகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.	நம்பிக்கைப் பொறுப்புச் சபை கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதுடன் முகாமைத்துவ ஆபத்தின் மீது கட்டணத்தை தீர்மானிப்பதும் ஏனைய செயற்பாடுகளும் பொருத்தமாக ஒவ்வொரு செயற்திட்டத்திற்காகவும் தனித்தனியாக நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக பொதுவான ஒரு அறிக்கை பேணப்படும்.	ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆகக் குறைந்த கட்டணம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவானது ஆபத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்ற போதிலும் அது சம்பந்தமான கலந்துரையாடல் குறிப்பு அல்லது சேவைக்கட்டணம் தொடர்பாக எந்த குறிப்பும் பேணப்படவில்லை.

	சபையின் அங்கீகாரத்துடன் கூட்ட அறிக்கையின் பிரதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் பிணைமுறி மற்றும் உத்தரவாத வருமானத்திற்கு காணப்படுகின்ற ஆபத்திற்கு இணங்க சில தொகை மேலதிகமாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இப்பெறுமதி முகாமைத்துவத்தினால் காணப்படுகின்ற ஆபத்தினை மதிப்பீடு செய்து பிணைமுறி மற்றும் உத்தரவாத வருமானத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படும். ஆபத்தினை மதிப்பீடு செய்வது தொடர்பாக எந்த ஆவணமோ அல்லது கலந்துரையாடல் குறிப்போ கோவைகளில் ஆவணப்படுத்தப்படவில்லை. இதற்கு மேலதிகமாக நிதியம் 2020 இலிருந்து 2023 வரையான ஆண்டறிக்கைகளில் சேவைக்கட்டணம் சம்பந்தமாக குறிப்பிட்ட அத்தியாயத்தில் இது சம்பந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.				
05	**கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**				
	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட 877(2)(உ) நிதிப் பிரணமாத்தின் பிரகாரம் நிதியத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிர்ணயிக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் மூன்று மொழிகளிலும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை	2021 2022 2023	சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	உரிய அறிக்கையினைத் தயாரிக்கும் போது அரசாங்க வழிகாட்டிக் கோவைக்கு இணங்க தேவையான அனைத்து தகவல்களும் முறைப்படியாக அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு	ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை.

				தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு நிதி ஆண்டும் முடிவடைந்து 150 நாட்கள் கடப்பதற்கு முன்னர் மேற்கூறிய அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை நிதியத்தினால் 2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. என்பதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.		ள்ளது. இந்த அறிக்கையானது பொருத்தமான நடவடிக்கைகளுக்காக நிறுவனத்தின் நடுவரான நிதி அமைச்சின் திறைசேரி செயலாளருக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் அனுப்புவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது என சான்றுபடுத்தப்பட் டுள்ளது.

06. பாதீட்டு கட்டுப்பாடு

	போது 1902 விசாரணைகளுக்கு இடையே வெளியிடப்படாத பொருட்கள் இறக்குமதி செய்வதற்குரிய 498 ஆக இருந்ததுடன் அதற்கு மேலதிகமாக மிகை அளவு இறக்குமதி செய்தல் தொடர்பான 224 விசாரணைகளும், பெறுமதி குறைத்து மதிப்பீடு செய்தல தொடர்பாக 207 விசாரணைகளும் காணப்பட்டன. எனினும் வலுவான சட்ட முறைமையொன்று ஸ்தாபிப்பதன் மூலம் இந்த பொதுவான சுங்க தவறுகள் கவனத்திற்கு உரிய மட்டத்தில் குறைக்க கூடியதாக இருப்பதுடன் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய இறக்குமதி வருமானம் உரிய பிரகாரம் சரியாக அரசாங்கத்திற்கு பெற்றுக்கொள்வதற்கான இயலுமையும் காணப்படுகின்றமையால் அதற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டி இருந்தது.		முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது.	Mgt (ARM) கட்டமைப்பில் உள்ளடக்குவதற்கும் அவ்வப்போது சுங்கத் தவறுகள் இடம்பெறும் விதம் தொடர்பில் பகுப்பாய்வு செய்து அதனை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், உரிய கட்டமைப்புகளை கூடிய விரைவில் நிறுவும் தேவைப்பாடு தொடர்பிலும் முகாமைத்துவத்தினால் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	அமைப்பில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) இணைக்கப்பட வேண்டும் என கணக்காய்வினால் அவ்வப்போது சுட்டிக்காட்டப்பட்டு வந்த நிலையில், இதுவரை அவ்வாறு செய்யப்படவில்லை.
15	பொருட்களை விடுவிக்கும் செயற்பாடுகள் தொடர்பான சுங்க பிரிவுகளில் அனேகமான சம்பவங்களின் காரணமாக ஆரம்பிக்கப்படுகின்ற சுங்க விசாரணைகள் நடவடிக்கைகள் அந்த விசாரணைகளின் செயல் முன்னேற்றத்தை அளவிடக் கூடிய திட்ட முறைமையொன்று காணப்படாது இருந்ததுடன் ஒவ்வொரு	2023	மத்தியமடுத்தப்பட்ட தரவு தகவல் முறைமையொன்று இலங்கை சுங்கத்திடம் பேணிச்செல்லப்படல் வேண்டும்.	இது தொடர்பாக மத்தியப்படுத்தப்பட்டமுறைமைக்காக CCR பதிவேடு பேணிச் செல்லப்படுவதுடன் அதனை விருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	மத்தியமடுத்தப்பட்ட தரவு தகவல் முறைமையொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

பிரிவுகளும்
தனித்தனியாக விசாரணை நடவடிக்கைகள் மேற்கொண்டு விசாரணை இறுதியின்
பின்னர் வெகுமதி செலுத்துவதற்காக
பணம் அனுப்பப்படுகின்றது.
விசாரணை
கோவை தொடர்பான
கோவைகள்
ஒவ்வொரு பிரிவுகளிலும்
பரவலாக
காணப்படுவதுடன் அதன்
பிரகாரம்
விசாரணை செயல்
முன்னேற்றம்
தொடர்பாக முகாமைத்துவம்
எடுப்பதற்கும்
மற்றும் செயலாற்றலை
பரீட்சிப்பதற்கும்
தேவையான
மத்தியப்படுத்தப்பட்ட தரவு
தகவல் முறைமையொன்று
திணைக்களத்திடம்
காணப்படவில்லை.

3.28 வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம்

	மொத்த சொத்துக்கள	மொத்த பொறுப்புகள்	மூலதனம	வரிக்கு முன்னைய இலாபம் /(நட்டம்)	கணக்காய்வு அபிப்பிராயம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	
2021	102,710,502	19,417,037	83,293,465	2,946,579	முனைப்பழியுள்ள
2022	120,092,499	21,357,611	98,734,888	12,043,191	முனைப்பழியுள்ள
2023	160,584,122	38,667,396	121,916,726	16,397,208	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	ஆறிக்கை ஆண்டு	கணக்காய்வாளரின் பரிந்துரை	நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை
01	நிதியத்தினால் பேணப்பட்டு வரும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்கு அமைய ஆண்டிற்கான மொத்த கடன் செலவு ரூபா. 1,521,042 ஆன போதிலும் உண்மையாக செலவு செய்யப்படாத பெறுமதிகள் (செலவிற்காக ஒதுக்குதல்) வேறு செலவுகளாக உள்ளடக்கப்பட்டு ரூபா. 2,306,023 தொகை கடன் செலவுகளாக நிதிமன கூற்றில் உள்ளடக்கப்பட்டு இருந்த காரணத்தால் ஆண்டுக்கான கடன் செலவுகள் ரூபா. 784,981 இனால் மிகையாக மதிப்பிடப்பட்டிருந்தது.	2023 2022 2021	கால எண்ணக்கருவின் பிரகாரம் ஆண்டுக்குரிய வருமானம் மற்றும் செலவுகள் சரியாக நிதிக்கூற்றினுள் இனம் காணப்படுதல் வேண்டும்.	நிர்வாக செலவுகளாக ரூபா. 1,330,872 கணக்காய்வுக் கட்டணம் ரூபா. 131,100 பாராட்டல் மதிப்பீடு ரூபா. 444,050 விளையாட்டு நலனோம்பல் ரூபா. 300,000 பதவியணி பயிற்சி ரூபா. 100,000 எனும் ரீதியில் மொத்த கடன் செலவு ரூபா. 2,306,023 செலவு மேற்கொள்ளப்பட்டது என்பது.	பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.
02	நிதியத்தின் நிலையான கணக்குகள் 3 இற்கு உரியதாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி	2023, 2022	மூல ஆவணத்தின் அடிப்படையி	வங்கி உறுதிப்படுத்தல் மூலம் கணக்கீடு	பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை

	வங்கியினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அத்தினத்திற்கான திரண்ட வட்டி ரூபா. 15,148,732 ஆன போதிலும் நிதிக் கூற்றில் நிலையான வைப்பு வட்டியாக ரூபா. 14,003,911 எனக் குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டுக்கான மிகை ரூபா. 1,144,821 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	ல் கொடுக்கல் வாங்கல்கள் சரியாக இனங்காண்பதற்குநடவடிக்கை எடுக்கப்படல வேண்டும்.		செய்யப்பட்டிருந்த வட்டி சரியானது எனக் கருதி இறுதி கணக்குகளினுள் உள்ளடக்கப்பட்டமையே இங்கு இடம்பெற்றுள்ளது. இதற்கு முந்தைய வருடத்தில் வங்கி உறுதிப்படுத்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட வட்டி செம்மையாக்கலுக்கு உட்படுத்தப்பட்டு கணக்கீடு செய்தல் கணக்காய்வு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதனால் இந்த ஆண்டில் வங்கி உறுதிப்படுத்தல் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட வட்டியினை வருடாந்த வட்டியாக இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது.	ல.
03	2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் I ஆம் பகுதியில் 15.1 ஆம் பந்தியின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிப் பிரமாணம் 877 (2) (இ) வழிகாட்டலின 04 இன் 01 ஆம் உப பந்திக்கு அமைய	2023 2022 2021	காலக் கருத்திற்கு அமைய ஆண்டுக்குரிய வருமானம் மற்றும் செலவுகள்	தடுத்தல் நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

	நிதியத்தின் அனைத்து பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முறையாக ஆதார ஆவணங்களின் அடிப்படையில் பொருத்தமான துணை பேரேட்டுப் புத்தகங்கள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காத வகையில் பல வருடங்கள் தொட்டு வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் நிர்வாகச் செலவு ஒதுக்கம், ஆண்டுக்குரிய செலவாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் நிதி நிலைமைக் கூற்றினுள் நோக்கம் அல்லது தேவைப்பாடு இன்றி ரூபா. 931,510 ஆன நிர்வாகச் செலவு உருவாகியுள்ளது.		சரியாக நிதிக் கூற்றினுள் இனம் காணப்படுதல் வேண்டும்.		
04	ஆளுகை சபைக்காக கொடுப்பனவு செய்வதற்கு தொடர்புயதாக வெளியிடப்பட்டுள்ள பீ.ஈ.டீ./3/2015 ஆம் இலக்க 2015 யூன் 17 திகதிய திறைச்சேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தின் ஆளுகை சபைக்கு கொடுப்பனவு செலுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் காணப்படாதிருக்கையில், முறையான அங்கீகாரமின்றி நிதியத்தின் ஆளுகை சபைக்காக மொத்தம் ரூபா 154,500 ஆன கொடுப்பனவொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்து.	2023, 2022, 2021	திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	நிதியத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக நிர்வாக சபை அங்கத்தவர்கள் 05 பேரின் சேவை வழங்கப்படுவதுடன் நிர்வாக சபை அனுமதியின் கீழ் மிகவும் குறைந்த நிர்வாக சபைக் கொடுப்பனவொன்று வருடாந்த நிர்வாக செலவு ஒதுக்கத்திற்கு உட்பட்டு செலுத்தப்பட்டு நிதியம் முகாமைத்துவ நடவடிக்கைகளை	பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

				ளப் பேணி வருகின்றது என்பது.
05	2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகனங்களுக்கான பணிப்புரைகளின் (வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம்) 03(1) ஆம் இலக்க பணிப்புரைக்கு அமைய			
(i)	பயிற்றுவித்தல் மற்றும் கற்கை நடவடிக்கைகளுக்காக ரூபா. 100,000 வரையில், விளையாட்டுக்கள், பொழுதுபோக்கு மற்றும் நலனோம்பல் நடவடிக்கைகளுக்காக ரூபா. 50,000 வரையிலும் மற்றும் பதவியணி அங்கத்தவர்களைப் பாராட்டுவதற்கு அல்லது விசேட மதிப்பீட்டிற்கு உட்படுத்தக்கூடிய செயலுக்கான பரிசு வழங்கும் நோக்கில் ரூபா. 50,000 வரையில் கணக்கீட்டு ஆண்டினுள் செலவிடுவதற்கு நிதி உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் எதிர்கால நிலைமைகளுக்காக ஒதுக்கீடு மேற்கொள்ளுவதற்கு நிதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் நடப்பு ஆண்டில் மேலே குறிப்பிட்ட விடயங்களுக்காக ரூபா. 300,000 ஒதுக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	2023, 2022, 2021	சட்டத்தின் கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல்.	பயிற்றுவித்தல் மற்றும் கற்கை நடவடிக்கைகள், விளையாட்டு பொழுதுபோக்கு, நலனோம்பல் மற்றும் பாராட்டல் நடவடிக்கைகளுக்காக வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதித் தொகையானது திணைக்களத்தின் பதவியணியினருடன் ஒப்பிடும்போது போதுமானதாக இல்லை என்பதனால் கடந்த காலம் தொட்டு பல வருடங்களுக்கான ஒதுக்கங்களைச் சேகரித்து குறித்த வருடாந்த வரையறைக்குட்பட்டு செலவிடல் இடம் பெற்றுள்ளது.

(ii)	மேலே (ஸ) இன் அவதானிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள வகையில் விளையாட்டு நடவடிக்கை ஒன்றிற்காக அதிகபட்சம் ரூபா. 50,000 இற்கு உட்பட்டு செலவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணக்கமற்ற வகையில் நடப்பு ஆண்டினுள் திணைக்களத்தில் நட்பு ரீதியிலான கிரிக்கெட் போட்டிக்காகவும் மற்றும் வலைப்பந்து போட்டிக்காகவும் ரூபா. 944,050 செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	2023	சட்டத்தின் கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல்.	2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் விளையாட்டு பொழுதுபோக்கு, நலனோம்பல் நடவடிக்கைகள் மற்றும் பதவியணி அங்கத்தவர்களுக்கான பாராட்டல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி அளவான ரூபா. 944,050 தொகை 2023 ஆம் ஆண்டில் மொத்த திணைக்களத்திற்காகவும் நடாத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிக்காக மற்றும் அரச வலைப்பந்து குழுவின் ஆடைகளை வழங்குவதற்காகவும் நிதியினை செலவிட நேரிட்டிருந்தது என்பது.	பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.
06	2011 இன் 04 ஆம் இலக்க மோட்டார் வாகன (வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம்) கட்டளை தொகுப்பில் 03 (1) ஆம் கட்டளை பிரகாரம் மோட்டார் வாகனங்கள் தொடர்பான முறைக்கேடுகள் மேற்கொள்ளும் நபர்கள்	2023, 2022, 2021	நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற் காக முறையான வேலைத் திட்டமொன்று	மோட்டார் வாகனங்கள் தொடர்பான முறைக்கேடுகள் தொடர்பாக திணைக்களத்தின் புலனாய்வு பிரிவிற்கு	பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

தொடர்பாக மோட்டார் வாகனங்கள் போக்குவரத்து ஆணையாளருக்கு தகவல்கள் வழங்கும் மற்றும் பிறழ் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் இனங்கானும் / பிறழ் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் நபர்களுக்காக வெகுமதிகளை கொடுப்பனவு செய்யும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான தகவல்களை வழங்குவதற்கான முறைமைகள் தாபிப்பதற்கு, மற்றும் வெகுமதி முறைமை தொடர்பான தகவல்களைப் பொதுமக்களுக்கு தெரிவிப்பதற்கு முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	தாயரிப்பதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும்.	புகாரளிக்கும் முறைமையொன்று காணப்படுகின்றதுடன் அவ்வாறு ஏதும் முறைகேடினை வழங்கும் நபருக்கு பணம் செலுத்துதல் தொடர்பாக மோட்டார் வாகனங்கள் (வெகுமதிகள் மற்றும் ஊக்குவிப்பு நிதியம்) கட்டளை இல 3 (1) ‘‘அ’’ பிரகாரம் போதுமான ஏற்பாடுகள் உள்ளது.

3.29 புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

	மொத்த சொத்துக்கள	மொத்த பொறுப்புகள்	மூலதனம	இலாபம்/மிகை/(நட்டம்)/ (பற்றாக்குறை)	கணக்காய்வு அபிப்பிராயம
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	
2021	628,635,112	4,111,084	624,524,028	248,572,349	முனைப்பழியுள்ள
2022	480,078,657	3,176,924	476,901,733	252,377,705	முனைப்பழியுள்ள
2023	608,492,820	2,463,192	606,029,628	334,633,332	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	ஆறிக்கை ஆண்டு	கணக்காய்வாளரின் பரிந்துரை	நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	ஆறிக்கைத் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை
01	நிதியத்திற்கு மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் ஊடாக நீர், மின்சாரம் மற்றும் அலுவலக இடவசதிகளை பெற்றுக் கொள்ளப்பட்டமைக்காக செலுத்த வேண்டிய பெறுமதியை கணக்கிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக ஆண்டிற்குரிய அச் செலவினங்கள்நிதிச் செயலாற்றல் கூற்றில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	2023 2022	ஆண்டிற்குரிய அனைத்து செலவவினங்களையும் சரியாகக் கண்டறிந்து நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல்.	எதிர்வரும் காலங்களில் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்து பேசி சரியான நடைமுறையை தயாரித்து அதற்கேற்ப பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
02	கணக்காண்டில் நிதியத்தின் செயற்பாடுகளுக்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நிதியத்தில் நிரந்தரமாக	2023	ஆண்டிற்குரிய அனைத்து செலவினங்களும் முறையே இனங் காணப்பட்டு நிதிக்	வாகன புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகளுக்காக சட்ட ரீதியான அங்கீகாரம்	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

	கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அவர்களின் சேவைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா. 3,067,810 ஆன சம்பளம் மற்றும் ஊதியம் என்பனவற்றை நிதியத்தின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்படாமை காரணமாக ஆண்டின் மிகை அப் பெறுமானத்தில் மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது.		கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல்.	மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் மூலம் கிடைத்துள்ளமையால் நிதியத்தினதும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கும் இடையே கூட்டிணைப்பினை பேணுவதற்காகவும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் சேவை புரிகின்ற புகை பரீட்சித்தல் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு இணைக்கப்படுவர். அவர்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நிரந்தர உத்தியோகத்தர்கள் என்பதனால் திணைக்களத்தின் ஊடாக சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது.	
03	நிதியத்தால் பராமரிக்கப்படும் கணக்கு புத்தகங்கள் மற்றும் ஆவணங்களின் பிரகாரம், 2023 ஜனவரி 01 இல் உள்ளவாறு சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரண உருப்படிகளில் 3 இன் கிரயம் ரூபா 283,534,928 ஆகவும், திரட்டப்பட்ட தேய்மானம் ரூபா 258,245,984 ஆகவும் இருக்க வேண்டிய நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட குறிப்பு இலக்கம் 01 இல் ஆதனங்கள் பொறிகள் மற்றம் உபகரணங்கள்	2023 2022	ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுகு இணங்க செயற்பட வேண்டும்.	இக்கணக்கீட்டுக் குறைபாடு கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

	கிரயம் ரூபா 230,008,038 மற்றும் திரட்டப்பட்ட தேய்மானம் ரூபா 204,718,592 எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் ஆதனங்கள் பொறிகள் மற்றம் உபகரணங்களில் உள்ளவாறு உரிய பெறுமதி பிரதிபலிக்கவில்லை.				
04	நிதியத்தினால் 2018 திசெம்பர் 17 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த் ரூபா 129.99 மில்லியன் மொத்த கிரயமான வளி தரத்தினை அளக்கும் உபகரணங்கள் மூன்றிற்கான ரூபா 17,650 மில்லியனான தேய்வு கணிக்கப்பட்டு நிதிக் கூற்றினுள் உள்ளடக்கப்படாமை காரணமாக நடைமுறையல்லாத சொத்துக்கள் மேற்படி கிரயத்தினால் அதிகரித்தும் ஆண்டின் மிகை பெறுமானத்தேய்வு பெறுமதியால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2023	ஏற்றுக்கொள்ளப் பட்ட கணக்கீட்டு நடைமுறைகளு க்கு இணங்க செயற்பட வேண்டும்.	சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	பரிந்துரையின செயற்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுத்திருக்கவி ல்லை.
05	நிதியத்தில் காணப்பட்ட ரூபா 47,247,000 கிரயமான சுற்றும் வளியின் தரத்தை அளவிடும் அலகு 2023 மார்ச் 10 ஆந் திகதி தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு கையளிப்பதற்குரிய கணக்கு வைக்கும் போது கையளிப்பு மேற்கொண்ட திகதி	2023	ஏற்றுக்கொள்ளப் பட்ட கணக்கீட்டு நடைமுறைகளு க்கு இணங்க செயற்பட வேண்டும்.	நடமாடும் வளி நிலைமை பரீட்சிக்கும் வாகனம் சட்டப்பூர்வமாக கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் 2023.03.10 ஆந் திகதி அன்று ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அவர்கள்	பரிந்துரையின செயற்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுத்திருக்கவி ல்லை.

	வரையான ரூபா. 1,786,325 தேய்மானத்தின் பெறுமதியை சீராக்கம் செய்ய வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் பெறுமானத் தேய்வாக ரூபா 3,106,650 கணக்கிடப்பட்டு நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டமையால் ஆண்டின் மிகை ரூபா. 1,320,325 வரை குறைவடைந்துள்ளது.			2023.03.10 ஆந் திகதி மேற்கண்ட வாகனத்தை பதிவு செய்ய சமர்ப்பிக்காததால், 2023.04.30 ஆந் திகதி கணக்கு புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டது. கணக்கு திருத்தங்களைச் செய்யும் பணியினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	
06	17/1615/702/002-xvii ஆம் அமைச்சரவை பத்திரம் மற்றும் 2017 ஓகஸ்ட் 09 ஆந் திகதி நடத்தப்பட்ட அமைச்சரவை கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 மற்றும் 04 ஆம் பந்திகளின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் புகை பரீட்சிப்பு நிதியத்தினை கலைத்து பொறுப்புக்களை தீர்த்து முடிவுறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சரவை அங்கீகாரம், நிதி அமைச்சின் அங்கீகாரம் அல்லது திறைச்சேரியின் அங்கீகாரமின்றி வரிசை அமைச்சர் ஊடாக நிதியத்தின் பாதீட்டினை அங்கீகரித்துக் கொண்டு நிதியத்தினை நடாத்திச் செல்வதற்கு நிதியத்தின் பொறுப்புச் சபை நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தின் தொடர்ந்து	2023 2022 2021	குறித்த சட்ட சூழலில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்	வாகன புகை நம்பிக்கை நிதியத்தை கலைப்பது தொடர்பாக, அமைச்சரவைப் பத்திரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான அவதானிப்புக்களை வழங்குமாறு நிதியமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புக்களை வழங்குவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அக்குழு அறிக்கை அமைச்சரவைக்கு வழங்கப்பட்டது. அந்த அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை மீண்டும் நிதியமைச்சின் அவதானிப்புகளுக்கு வழங்கப்பட்டதுடன், நிதி அமைச்சினால் அந்த	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

இயங்கும் தன்மை நிச்சயமற்றதென வெளிப்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டன. அதன் பிறகு, அப்பரிந்துரை அமைச்சரவையால் தேசிய செயற்பாட்டு ஊடகத்திற்கு அனுப்பப்பட்டது அங்கு இந் நிதியத்தை தொடர்ந்து பேணிச் செல்வதற்குப் பதிலாக மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த தீர்மானத்தின் படி, இது தொடர்பான ஆய்வுகளை வழங்குமாறு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு அமைச்சரவை மீண்டும் அறிவித்தது. உரிய அறிவுறுத்தல்களின பிரகாரம், தேவையான விளக்கங்கள் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டு, தேசிய செயற்பாட்டு ஊடகத்திற்கு அமைச்சரவையினால் அவதானிப்பு அனுப்பப்பட்டதன் பின்னர், தேசிய செயற்பாட்டு அறை அது தொடர்பில்

				கலந்துரையாடி வருகின்றது.	
07	புகை பரீட்சிக்கும் தனியார் நிறுவனங்கள் இரண்டுடன் ஏற்படுத்திற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒவ்வொரு வாகனங்களுக்காகவும் அறவிடப்படும் பரீட்சிப்பு கட்டணத்தில் 10 சதவீதம் புகை பரீட்சித்தல் நிதியத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். எனினும் மேற்படி தனியார் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பரீட்சிப்பு எண்ணிக்கைகள், அவர்களினால் அறவிடப்பட்ட கட்டணங்கள் மற்றும் அதன் பிரகாரம் புகை பரீட்சித்தல் நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய வருமானம் தொடர்பாக பரீட்சித்து அரசு பெற வேண்டிய வருமானம் உரிய வண்ணம் பெறப்பட்டதா என உறுதி செய்யப்படாது 2023 ஆம் ஆண்டினுள் இரு நிறுவனங்களினாலும் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 336.47 மில்லியன் பெறுமானம் நிறுவனத்தின் வருமானமாக இனங் காணப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது.	2023 2022 2021	வருமானம் முறையாக சான்றுறுதிப் படுத்தப்பட வேண்டும்.	சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தகவல் அமைப்பை அணுகுவதற்கும், எந்த நேரத்திலும் மேற்கொள்ளப்படும் சோதனைகளின் அளவைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கும் தேவையான கடவுச் சொற்களை புகை பரிசோதனை அலுவலகம் கொண்டுள்ளது. அதன் பிரகாரம் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஒப்பீடுகள் செய்யப்படுகின்றன. மேலும், கணக்காய்வு அலுவலகத்தின் பரிந்துரைகளின் படி, ஒப்பந்தகார புகை பரிசோதனை நிறுவனங்களின் கணினி அமைப்பை கணக்காய்வு செய்வதற்கான ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
08	புகைப் பரிசோதனைகளை நடத்தும் நிறுவனங்கள், நடத்தப்பட்ட சோதனைகள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்குத் தங்கள் கணினி அமைப்புகளை அணுகுவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யவில்லை. தேவைப்படும் சந்தர்ப்பங்களில் தங்கள்	2023	வருமானத்தை முறையாக இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	ஒப்பந்த கம்பனியால் வாகன புகை பரிசோதனை நிகழ்ச்சி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக தானியங்கி மென்பொருள் நிரல்களை	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

	கணனிகளை அணுக டொங்கல்கள் (dongle) வழங்கப்பட்டன, ஆனால் அவை சரியாக வேலை செய்யாததால், தகவல்களைப் பெறுவது சிரமமாகிறது.			உருவாக்குவதன் மூலம் காற்று மாசு சோதனை திட்டத்தை நிகழ்நிலையில் சரிபார்ப்பதற்காக இரண்டு ஒப்பந்த நிறுவனங்களை அனுமதிக்க வாகன புகை அலுவலகத்திற்கு dongle வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், சாதாரண அலுவலக நேரங்களில், சுமார் 30,000 வாகன புகை பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன, எனவே தரவிறக்கம் மெதுவாக இருக்கும். இந்த தவறை சரி செய்யுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.	
09	01/2020 ஆம் இலக்க 2020 ஓகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை நிதிப் பிரமாணம் 876 (2) (அ) பிரகாரம் தற்போது காணப்படும் நிதியத்தின் செயற்பாடு தேசிய தேவை எனத் தோன்றினால், அந்த நிதியம் தொடர்பாக உரிய முறையில் சட்டத்தின் மூலம் முறையாக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படவில்லை எனின், இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்ட ஒரு ஆண்டினுள் பாராளுமன்ற அனுமதி பெறப்பட வேண்டிய	2023 2022 2021	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல வேண்டும்.	2018 இல் வாகன புகை பரிசோதனை நிதியத்தை கலைக்கும் தீர்மானத்தை இடைநிறுத்த 2019 பெப்ரவரியில் போக்குவரத்து அமைச்சர், அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்கும் அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தார். அதன் போது நிதியமைச்சரும்,	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

போதிலும் அத்தகைய அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

போக்குவரத்து அமைச்சரும் கலந்துரையாடி இதற்கான தீர்மானமெடுத்து அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூறியிருந்தனர். ஆனால் அப்போது நாட்டில் நிலவும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக இது குறித்து தீர்மானம் எடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆனால், அந்த நிதியின் இருப்பிற்காக, திறைசேரிச் செயலாளர், திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஒருவரை, புகை பரிசோதனை நிதியத்தின் தலைவராக நியமித்து, அதன்படி நிதியத்தின் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் இது தொடர்பான விடயங்கள் 2023 ஜனவரியில் அமைச்சரவையில் முன் வைக்கப்பட்டன. நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு குறித்து முடிவெடுப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது மற்றும் அதன் பரிந்துரைகள்

				அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது மற்றும் வாகன மாசு நிதியை மீண்டும் நிறுவுவது தொடர்பாக பிரதமர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள தேசிய செயல்பாட்டு அலுவலகத்தின் பரிந்துரைகள் அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டுள்ளன.	
10	புகை பரிசோதனை நம்பிக்கை பொறுப்பு சபையினை கலைத்து மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பிரிவொன்றாக புகை பரீட்சித்தல் செயற்திட்ட அலுவலகமொன்றை தாபிப்பதற்கு 2017 திசெம்பர் 10 ஆந் திகதிய DMS/1143/VETF ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கையில் மற்றும் PFD/RED/CIR/2108/12 ஆம் இலக்க 2018 ஓகஸ்ட் 18 திகதிய திறைச்சேரி செயலாளரின் கடிதத்தின் ஊடாக நிதியத்தினை கலைப்பதற்கு பரிந்துரை பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கையில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பிரிவொன்றாக தாபிக்கப்படாது அங்கீகரிக்கப்பட்ட	2023 2022	முறையான அனுமதியின் அடிப்படையில் செலவுகளை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.	நிதியத்தின் பணிகளை செயற்திறனாக நிறைவேற்றிக் கொள்வதற்கு உத்தியோகத்தர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக நம்பிக்கை பொறுப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பு சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டு இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏதேனும் உத்தியோகத்தரினால் இணைந்த படிகளைக் கோரும் சந்தர்ப்பங்களில் இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதில்லை.	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

	பதவியணிக்கு புறம்பாக வேறு பதவிகளை பேணிச் சென்று சம்பளம் மற்றும் படிகளை கொடுப்பனவு செய்யப்பட்டு நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபை நடவடிக்கை எடுத்திருந்தது.				
11	ஒரு குறிப்பிட்ட பதவி தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பளத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பதவி தொடர்பான வேலை விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகள் மற்றும் அத்தகைய செயற்பாடுகளுக்கு மேலதிக கட்டணம் உரித்தாகாது. ஆனால், பணி விவரிப்பில், புகைப் பரிசோதனை நிகழ்ச்சிகள் நடத்துதல், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்ற புகை பரிசோதனைக்குரிய பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ள 13 திட்ட உதவியாளர்கள், ஆராய்ச்சி உதவியாளர்கள், திட்ட தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு நிதி அமைச்சின் அனுமதியின்றி, வேலை விவரத்தின் பிரகாரம் செய்ய வேண்டிய பணிகள், பணிப்பாளர் குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் நாள் ஒன்றுக்கு ரூபா .2,000 வரவுப் படித் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில், மேற்படி விடயத்திற்கு முறையான அனுமதியின்றி ரூபா 846,175 கொடுப்பனவுகள்	2023	முறையான அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	நிதியத்தின் செயற்பாடுகளை செயற்திறனாக மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்களின் பங்களிப்பைப் பெறுவதற்காக, நம்பிக்கை பொறுப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம், நிதியக் குழுவின் அங்கீகாரத்துடன் இந்தக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன.	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

வழங்கப்பட்டிருந்தன.

12	நிதி அமைச்சு அல்லது தொடர்புடைய சம்பள அதிகார அமைப்புகளின் அங்கீகாரம் இல்லாமல் 21 திசெம்பர் 2022 பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2022/04 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் பேரில் மாதமொன்றுக்கு ஆகக் கூடியது 06 தடவை புகை பரிசோதனை நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு பெறச் செய்யப்படும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்ற வெளி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தலா ரூபா. 2,000 வீதம் படியும், க்ளீன்கோ லங்கா மற்றும் லாப் எக்கோ ஸ்ரீ தனியார் கம்பனிகளின் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு ரூபா 1,000 ஒரு முறை கொடுப்பனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் முறையான அனுமதியின்றி மேற்படி விடயத்திற்கு ரூபா 1,230,500 கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன.	2023	முறையான அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	நிதியத்தின் செயற்பாடுகளை செயற்திறனாக மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர்களின் பங்களிப்பைப் பெறுவதற்காக, நம்பிக்கை பொறுப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம், நிதியக் குழுவின் அங்கீகாரத்துடன் இந்தக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன.	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
13	புகை பரிசோதனை நிதியத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மூன்று திட்ட உதவி உத்தியோகத்தர்கள், பத்து தொழில்நுட்ப வல்லுநர்கள், இரண்டு சாரதிகள் மற்றும் இரண்டு அலுவலக உதவியாளர்கள்	2023	முறையான அங்கீகாரத்தின் பேரில் செலவினங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்	இங்கு குறிப்பிட்டப்பட்ட சகல உத்தியோகத்தர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக அனைத்து ஆண்டுகளுக்குரிய	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

	ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களது ஒப்பந்தங்கள் 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் காலாவதியாகி இருந்தன. ஆனால் மேற்கூறிய ஒப்பந்தங்களை நீடிக்காமல் அல்லது புதுப்பிக்காமல், மீளாய்வாண்டில் பதினேழு உத்தியோகத்தர்களை சேவை சட்ட ரீதியான அடிப்படை ஒன்று இல்லாமல் பணி அமர்த்தி ரூபா 8,585,980 ஆன சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.		வேண்டும்.	நம்பிக்கை பொறுப்பு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது டன் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினை ஒழித்து தற்போது சேவையில். ஈடுபடுத்தியுள்ள ஆட்களை நிரந்தர சேவைக்கு உள்ளீர்க்கும் நோக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுட ன் அனைத்து உத்தியோகத்தர்களு க்கும் உரிய கடிதங்கள் மற்றும் சேவை உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளதா க அறிய தருகின்றேன்	
14	2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஏற்பாட்டில் ஏனைய வெளிவாரி நிறுவனங்களுக்கு நிதியம் வழங்கல் என உள்ளடக்கப்படாதிருக்கையில் மற்றும் நிதி அமைச்சின் அல்லது வரிசை அமைச்சின் அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் 2023 ஓகஸ்ட் 17 ஆந் திகதி சுற்றாடல் அமைச்சிற்கு ரூபா 1,383,500 தொகை கையளிக்கப்பட்டிருந்தது.	2023	முறையான அங்கீகாரத்தின் பேரில் செலவினங்கள ை மேற்கொள்வதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	புகை பரிசோதனை நிதியத்தை தாபித்ததன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்குரிய செயற்பாடுகளுக்கான நிகழ்ச்சித் திட்டமொன்றுக்காக பொறுப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நம்பிகை பொறுப்பு சபையின் அங்கீகாரத்தின் பேரில் நிதியம் வழங்கப்பட்டது.	பரிந்துரையினை செயற்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுத்திருக்கவி ல்லை.
15	புகை பரீட்சித்தல் உபாகரணங்கள் தொடர்பாக 2020 சனவரி 16 ஆந் திகதி மற்றும் நவம்பர் 03 ஆந் திகதி நிதியம் நம்பிக்கை	2023 2022	செலவினக் கட்டுப்பாட்டிற்கு ரிய முறையான நடைமுறையொ ன்று	ஒட்டுமொத்த காற்று மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கத்துடன் வாகன புகை	பரிந்துரையினை செயற்படுத்துவ தற்கு நடவடிக்கை

பொறுப்பு சபையுடன் எடுத்துள்ள தீர்மானத்தின் பிரகாரம் மொத்த கிரயம் ரூபா 82.752 மில்லியனான Eco Tech மாதிரி சுற்று வளியின் தரத்தினை அளவிடும் 02 அளவீட்டு உபகரணங்களை மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் குறித்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள உபகரணங்களின் செயற்பாட்டு திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு சேவைகளுக்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாத ரூபா 3,437,358 ஆன தொகை புகை பரிசோதனை நிதியத்திற்கு உரியதல்லாத கிரயமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்தது.	தயாரித்தல்	பரிசோதனை பொறுப்பு நிதியம் நிறுவப்பட்டது. அதன் பிரகாரம், வாகனங்கள் உட்பட மற்றும் பிற ஆதாரங்களால் ஏற்படும் காற்று மாசுபாட்டைக் குறைக்க, விஞ்ஞான அளவிலான காற்று நிலை அளவீட்டு கருவிகளை வாங்கி, நிலையானதாக பராமரிக்கவும், அதிக பணம் செலவழிக்கவும் அவசியம். இந்த நிதியின் முதன்மை நோக்கங்களில் ஒன்று காற்றின் தரத்தை மேம்படுத்துவதாகும். அத்தகைய நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்திற்கு மேலதிக செலவினை மேற்கொள்ள விடாமல் ஒதுக்கப்படும் பணத்தை இந்த நிதியத்தின் மூலம் நிதி ஏற்பாடு செலவிடல் இடம்பெறுகின்றது. அதன் பிரகாரம் காற்றின் தரம் குறித்த சரியான தகவல்களைப் பெறுவதற்கு கொள்கை தீர்மானங்களுக்கு வருவதற்காக அரசு நிறுவனங்களுக்குறு இவ்வாறு பணம் வழங்கப்பட்டுள்ளது.	எடுத்திருக்கவி ல்லை.

16	காற்றின் தரம் மற்றும் தரவு முகாமைத்துவ முறைமையின் ஒருங்கிணைப்பு மற்றும் விநியோகத்திற்கான தேசிய தளத்தை மேம்படுத்துவதற்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு சமர்ப்பித்த முன்மொழிவை முத்தரப்பு நடைமுறைப்படுத்துவதற்காக, 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் மூலம் ரூபா 150 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி பணிகளுக்குரிய செயற்பாடுகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்படவில்லை. இணங்கப்பப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம், தொடர்புடைய நிறுவனங்கள் செய்ய வேண்டிய வேலையின் செயன் முன்னேற்றத்தை சரிபார்த்து, அதற்கான கொடுப்பனவுகளைச் செய்ய வேண்டும் என்றாலும், முன்னேற்றத்தை சரிபார்க்காமலும், செய்ய வேண்டிய வேலையை உறுதிப்படுத்தாமலும் ரூபா 9 மில்லியனை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	2023	நிதியத்தை கவனமாகச் செலவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.	குறித்த செயற்பாடுகளை மேற்கொள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பணம் வழங்கப்பட்டுள்ளது.	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
17	நிதியத்தால் முதலீடுகளைச் செய்வதற்கு முன்னர், நிதியமைச்சரின், திறைசேரிச் செயலாளர் மற்றும் அமைச்சரவை அனுமதியின்றி, நிதியத்தின் மிகை தொகையிலிருந்து ரூபா 500,000,000 வரை நிலையான வைப்புக்களில்	2023	மிகை நிதியினை திறைசேரி செயலாளரின் அனுமதியுடன் முதலீடு செய்யவோ அல்லது அரசின்	மிகை நிதி வாகன புகை பரிசோதனை நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையிடமிருந்து பெற்றுக் கொண்ட அங்கீகாரத்திற்கு உட்பட்டு பொது திறைசேரிக்கு	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

முதலீடு செய்யப்பட்டிருந்தது. நிதியத்தின் கணக்கின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 வரை திரட்டிய இலாபம் ரூபா 612.023 ஆக இருந்த போதும் அதன் திரட்டிய இலாபத்தை திரட்டு நிதிக்கு செலவு வைக்காமல் ரூபா 551.888 மில்லியன் நிலையான வைப்புக்களிலும் ரூபா 60.135 மில்லியன் சேமிப்பு வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

பணத்தின் முறைப்படி திரட்டு நிதியத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல்.

மாற்றப்பட்டது. ஆதலால் 2023 ஆம் ஆண்டின் போது பொது திறைசேரியின் வேண்டுகோளின் அடிப்படையில் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு ரூபா 200,000,000 பொது திறைசேரிக்கு மாற்றப்பட்டது. கணக்கில் மிகை பணம் இருக்கும் போது நம்பிக்கை பொறுப்பு உடன்படிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரி பிரதி செயலாளர் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஆலோசணையின் பிரகாரம் மேவுகை அங்கீகாரத்திற்கு உட்பட்டு தற்போது கணக்கில் காணப்படும் மக்கள் வங்கியில் குறுங்கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. எனினும் திறைசேரியின் மிகை தொகையில் ஒரு பகுதியை தருமாறு செய்யப்பட்ட வேண்டுகோளுக்கு திறைசேரிக்கு நிதி வழங்கப்பட்டது. நிதியத்தின் மிகை பணம் அரச நிதித் திணைக்களத்தின் வேண்டுகோளின்

				பிரகாரம் நம்பிக்கை பொறுப்பின் அங்கீகாரத்திற்கு மாத்திரம் உட்பட்டு திரட்டு நிதிக்கு செலவு வைக்கப்படும். அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 200 மில்லியன் தொகை திறைசேரிக்கு செலவு வைக்கப்பட்டுள்ளது.	
18	வாகனங்கள் தொடர்பான வளி மாசடைவு, இலங்கையில் பிரதான நகரங்களில் வளியின் தரம், வலுசக்தி சுற்றாடல் மற்றும் பொருளாதார தாக்கல்கள் போன்ற வெவ்வேறு பரிசோதனைகளுக்காக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை புகை பரிசோதனை நிதியத்தின் ஊடாக ரூபா 29.52 மில்லியன் செலவினமொன்று ஏற்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டத்தில் இருந்து இறுதி அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு எந்தவொரு சாதகமான செயற்பாட்டிற்காகவும் வேலைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தப்பட்டு செயற்படுத்தியிருக்கவில்லை	2023	பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி அறிக்கைகளை சாதகமான நடவடிக்கையென் றுக்காக பயன்படுத்த வேலைத் திட்டமொன்று தயாரித்தல்.	தற்போது அனைத்து பரிசோதனை அறிக்கைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்வதுடன் பரிசோதனை அறிக்கைகள் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பரிந்தரைகளை செயற்படுத்தல் மற்றும் குறித்த தரவுகளை அது தொடர்பில் ஆர்வமுள்ள தரப்பினருக்கும் சுற்றாடல் அமைச்சின் வளி வள முகாமைத்துவ அலகிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்வதுடன் எங்கள் வலைத் தளத்திலும் சுற்றாடல் அமைச்சின் வலைத் தளத்திலும் பிரசுரிப்பதற்கு	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

19	புகை பரிசோதனைக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ள இரண்டு தனியார் நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் பத்தி 4.1 ஆம் பந்தியின் பிரகாரம், ஒப்பந்ததாரர்களால் நாளாந்த வருமானத்தில் 10 சதவீதத்தை ஏழு நாட்களுக்குள் புகை பரிசோதனை நிதியத்திற்கு அனுப்ப வேண்டும். ஒப்பந்தம் செய்த ஒரு கம்பனி மேற்கண்ட நிபந்தனையை பூர்த்தி செய்வதற்காக புகை பரிசோதனை நிதியத்திற்கு உரிய தொகையை ஏழு நாட்களுக்குள் செலுத்தியிருந்த போதும் ஆனால் மற்ற ஒப்பந்த நிறுவனம் மேற்கூறிய நிபந்தனையை பூர்த்தி செய்ய தொடர்புபட்ட காலத்திற்குள் நிதியத்திற்கு பணத்தை அனுப்பவில்லை. உடன்படிக்கை பிரகாரம் 3 சதவீதம் மேலதிக கட்டணத்தை வசூலிக்கப்பட வேண்டிய போதிலும், அத்தகைய மேலதிக கட்டணத்தை அறவிடுவதற்கு புகை பரிசோதனை நிதியத்தால் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன். கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டின் படி, 2023 ஆம் ஆண்டில் ஒரு நாள், இரண்டு நாட்கள் மற்றும் மூன்று நாட்கள் என தாமதமாக செலுத்தியதற்காக ரூபா 1,189,569 மிகை	2023	வருமானத்தை முறையாக இனங் காண்பதற்கு உரிய நடைமுறை யொன்று தயாரிக்கப்பட வேண்டும்.	கம்பனிகளுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் பிரகாரம், வாகன புகை பரிசோதனை மூலம் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை 07 வேலை நாட்களுக்குள் பெறப்பட வேண்டும். அதன் பிரகாரம், பணம் கிடைத்துள்ளதுடன் குறிப்பிடப்பட்டுள்ள விலகலொன்று அவதானிக்கப்படவில் லை. மேலும், இந்த ஏற்பாட்டை எளிதாக்குவதற்காக நாளாந்த பணத்தை அடுத்த நாள் செலவு வைக்குமாறு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ள து. தற்போது அதற்கேற்ப தினசரி பணத்தை செலவு வைக்கின்றனர் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். 2024 ஜனவரி முதல், அன்றாட வருமானம் இனங் காணக்கூடிய வகையில் இரண்டு புகை பரிசோதனை நிறுவனங்களிடமிருந் தும் அறிக்கைகளை பெற்றுக்கொள்வது இடம்பெறுகின்றது.	பரிந்துரையினை செயற்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுத்திருக்கவி ல்லை.

	அறவீடொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. கம்பனியால் தினந்தோறும் சேகரிக்கப்படும் வருமானத்தை கண்டறிய நிறுவனங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பிக்காததால், ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமதக் கட்டணங்களைக் கணக்கிடுவது சிக்கலாக இருந்தது.				
20	புகை பரிசோதனை நம்பிக்கை நிதியம் ரூபா 82.75 ஆன செலவினமொன்றினை ஏற்று இரண்டு சுற்றுப்புற வளியின் தரத்தினை அளக்கும் அலகுகளை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு மற்றும் ரூபா 47.24 மில்லியன் கிரயத்தினை உடைய நடமாடும் சுற்றுப்புற வளி தரத்தினை அளக்கும் உபகரணத்தினை கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் வழங்கியிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த உபகரணங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளும் அளவீட்டு தரவுகள் நிதியத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் மேற்படி வளி தர அளவீட்டு உபகரணத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட அளவீட்டு தரத்தினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய பணி தொடர்பாக முன் குறிப்பு வேலைத் திட்டம் இல்லாமை மற்றும் அவ் அளவீட்டு தரவுகளைப் பயன்படுத்தி எந்தவொரு பயனுள்ள பணியொன்றும்	2023 2022	சொத்துக்களை விளைவற்ற வகையில் வைக்காமல் பயன்படுத்துதல	இந்த உபகரணத்தை கொள்வனவு செய்வதன் முக்கிய நோக்கம், வளித் தர முகாமைக்குத் தேவையான தரவுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பொது மக்களுக்குக் காட்சிப்படுத்துவதாகும். அதன் பிரகாரம், காற்றின் AIR QUALITY INDEX தரக் குறியீடு உருவாக்கப்பட்டு, அவற்றைச் சுற்றியுள்ள காற்றின் தரம் காட்டப்படும். மேலும், இந்த அலகுகள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் தரவு, ஆர்வமுள்ள தரப்பினருக்கு தரவுகளைக் கிடைக்கச் செய்வதற்காக, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் இணையத்	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

	மேற்கொள்ளப்படாமை காரணமாக ரூபா 130 மில்லியனிற்கு அதிகமான அரச நிதி முதலீடு மற்றும் உபகரணங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த அளவீட்டு தரவுகள் விளைவற்றதாக காணப்பட்டது.			தளங்களில் காட்டப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக இந்தக் காற்றின் தர முகாமை தொடர்பான கொள்கைகள், தீர்மானங்கள் மற்றும் செயல்பாடுகளை அறிந்து கொள்வதற்காக சுற்றாடல் அமைச்சின் காற்றுத் தர முகாமை நிலையத்தால் இந்தத் தரவுகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.	
21	நிதியத்தினை ஆரம்பித்த 2008 ஆம் ஆண்டு தொடக்கம் நிதியத்தினை தாபித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வளியின் தரத்தினை அளக்கும் உபகரணங்கள் மற்றும் புகை பரிசோதனை உபகரணங்கள் வேறு வெளி நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு ரூபா 283.5 மில்லியன் மற்றும் பரீட்சித்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 40 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அம் முதலீடுகளின் ஊடாக நிதியத்தின் நோக்கங்கள் அடைந்துள்ளமை தொடர்பில் உறுதி செய்வதற்கு செயலாற்றல் அறிக்கை அல்லது செயன் முன்னேற்ற அறிக்கைகள் ஏதும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் செயலாற்றல்	2022	செயலாற்றல் அறிக்கை அல்லது செயன் முன்னேற்ற அறிக்கை சரியான நேரத்தில் தயாரிக்கப்படல் வேண்டும்.	கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றோம். அவ்வாறே தற்போது நிதியின் செயலாற்றல் தொடர்பான தகவல்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றது.	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

	தரவு / அறிக்கைகள் என கடந்த 15 ஆண்டுகளினுள் நிதியத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு பொறுப்பு சபை தவறியிருந்தது.				
22	புதிய புகை பரிசோதனை மத்திய நிலையங்கள் தாபிப்பதற்காக தேவைப்படுகின்ற அடிப்படை அங்கீகாரத்தில் மற்றும் தேவைப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை உறுதி செய்யப்படாது புகை பரிசோதனை நிதியத்தினால் 2017 திசெம்பர் 28 ஆந் திகதி ரூபா 21.937 மில்லியன் கிரயமொன்றினை ஏற்று 10 புகை பரிசோதனை தொகுப்புக்களை இலங்கை போக்குவரத்து சபைக்கு பெற்றுக் கொடுத்திருந்ததுடன் மீளாய்வாண்டு வரை மேற்படி புகை பரிசோதனை மத்திய நிலையம் தாபிப்பதற்கான தேவைப்படுகின்ற சட்ட ரீதியான தீர்வுகள் பெற்றுக் கொள்ள இயலாமையின் காரணத்தினால் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தொடக்கம் அவ் உபகரணங்கள் பயன்படுத்தப்படாது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட முடியாத நிலையை அடைந்து வந்தது.	2022	அடிப்படை அங்கீகாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்துள்ளமை உறுதி செய்யப்பட்ட பின்னர் இவ்வாறான முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.	மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டிக்காக வருமான அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் அது தொடர்பில் தற்போது அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதென தெரிவித்துக் கொள்வதுடன் மிகவும் விரைவில் அந் நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்படவுள்ளதென தெரிவிக்கின்றேன்.	பரிந்துரையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.30 மது வரி வெகுமதி நிதியம்

	மொத்த சொத்துக்கள	மொத்த பொறுப்புகள்	மூலதனம	வரிக்கு முன்னைய இலாபம்/(நட்டம்)	கணக்காய்வு அபிப்பிராயம
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	
2021	291,524,196	38,844,870	252,679,326	(71,662,783)	முனைப்பழியுள்ள
2022	331,806,612	31,086,992	300,719,620	48,444,530	முனைப்பழியுள்ள
2023	362,116,691	24,363,751	337,752,940	36,968,594	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் செயற்படு நிலைமை
3.	நிதி நிலைமைக் கூற்றில் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 47,134,000 தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும், அது கட்டிடத்தின் பெறுமதி மாத்திரமாகும். எவ்வாறாயினும், கட்டிடம் அமைந்துள்ள காணியை 2021 ஆண்டு இறுதி வரை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்காததுடன், காணியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.	2021	கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரிமையை முறைப் பிரகாரம் உறுதிப்படுத்தி பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல்	கல்வி அமைச்சுக்கு சொந்தமான காணியொன்றாக காணப்படுவதனால் உரித்தாக்கல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உரித்தாக்கல் சான்றிதழ்கள் இதுவரை கிடைத்திருக்கவில்லை.	2013 ஆண்டு முதல் மது வரித் திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்த மது வரிப் பயிற்சிப் பாடசாலைக்குரிய காணி மற்றும் கட்டிடம் தொடர்பான பரிந்துரை 2024 செப்தம்பர் வரை செயற்பட்டிருக்கவில்லை.

4.	2021 இறுதி வரை ரூபா 47,134,000 தொகைக்கான கட்டிடத்திற்காக பெறுமானத் தேய்வு சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2021	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி செயற்படுதல்	2022 ஆண்டில் பெறுமானத் தேய்வு கணிப்பதற்காக உரிய உத்தியோகத் தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	கட்டிடங்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து இது வரை பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.
5.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் படி ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரண அட்டவணையில் சொத்துக்களின் மொத்த திறன் மதிப்பு திரண்ட பெறுமானத் தேய்வு, தேறிய திரண் மதிப்பு வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், கட்டிடங்கள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் உட்பட 08 சொத்துத் தொகுதி விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 101,798,966 இற்கான தேறிய திரண் மதிப்பு மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. 2023 ஆண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு அந்த ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மொத்த திறன் மதிப்பு ரூபா 190,995,393 தொகையாக இருந்தது.	2023	- மேற்படி -	எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	கணக்கீட்டு நியமங்களின் படி செயற்பட்டிருக்கவில்லை.
6.	1999 இன் 08 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் பந்தி 17(ஆ) I மற்றும் II இன் படி கிடைக்கக்கூடிய சிகரட் தண்டப் பணத்தின் 25 சதவீதப் பகுதியொன்றின்	2023	புகையிலை வெகுமதி நிதியம் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1999 இன் 08 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்திற்குரிய கட்டளைகளுக்கு தேவையான	புகையிலை வெகுமதி நிதியமொன்று நிறுவியிருக்கவில்லை.

	மூலம் புகையிலை வெகுமதி நிதியமொன்று நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், 1999 ஆண்டு முதல் 2023 ஆண்டு இறுதி வரை அவ்வாறான நிதியமொன்று நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது வரை வருடாந்தம் ஒதுக்கப்பட்ட தொகை முதலீடு செய்யப்படாமல் புகையிலை வெகுமதி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 24,363,751 இற்கான நீண்டகால பொறுப்பொன்றென காணப்பட்டது			புதிய திருத்தங்களை உட்படுத்துவதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்துடன் கலந்துரையாடி புகையிலை வெகுமதி நிதியம் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	
7.	2019 திசெம்பர் 27 திகதிய மது வரிச் சுற்றறிக்கை இலக்கம் 10/2019 இன் பந்தி 02 இன் படி தற்போது காணப்படுகின்ற 1994 மார்ச் 04 திகதிய மது வரி அறிவித்தல் இலக்கம் 818 இனை திருத்தம் செய்வதன் கீழ், 2019 மார்ச் மாதம் முதல் திணைக்களத்தில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தும் போது வெகுமதி நிதியத்திலிருந்து பங்களிப்பு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 2022 ஆண்டின் போது ரூபா 54,243,053 தொகை மற்றும் முன்னைய ஆண்டுகளில் ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காக உரிமை கோறியிருக்காத உத்தியோகத்தர்களுக்கு 17 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,133,785 இற்கான	2022	1994 மார்ச் 04 திகதிய 818 மது வரி அறிவித்தலின் திருத்தம் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.	1994 மார்ச் 04 திகதிய 818 மது வரி அறிவித்தல் திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்களின் விசாலத் தன்மையை கவனத்தில் எடுத்து தற்போதைக்கு பொருந்தக்கூடிய விதத்தில் 818 மது வரி அறிவித்தல் திருத்தப்பட்டு அங்கீகாரத்திற்காக 2021.03.03 திகதி நிதியமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது என.	818 இலக்கம் கொண்டு மது வரி அறிவித்தலின் திருத்தம் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

	தொகையொன்று உட்பட ரூபா 55,376,838 தொகை மது வரி நிதியத்தில் இருந்து ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவற்காக செலவிடப்பட்டிருந்தது. திணைக்களத்தின் அனைத்து பதவியணியினர்களுக்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகள் பெறக்கூடிய வகையில் குறிப்பிட்ட மது வரி அறிவித்தலின் திருத்த அலுவல்கள் 2022 ஆண்டு இறுதியளவில் 27 வருடங்கள் கடந்திருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.				
8.	மது வரித் திணைக்களத்தின் 2023 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 4,000 பொறிமுறைக் குற்றங்கள் பிடித்தல் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டு, 5,499 பிடித்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றில் 10 மது வரி நிலையங்களின் இலக்குகளை அடைதலின் முன்னேற்றம் குறைந்த பெறுமதியை கொண்டிருந்ததுடன், 10 மது வரி நிலையங்கள் வருடாந்த இலக்கினை மிகைத்திருந்த போதிலும், பிடித்தல் இலக்குகள் குறைந்த பெறுமதியில் காணப்பட்டது மேலும், 2023 ஆண்டில் வெகுமதித் தொகை செலுத்துவதற்காக அடிப்படையாகக்	2023	சுற்றிவலைப்புக்களின் பண்புசார் முன்னேற்றமொன்றினை நெருங்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.	நிலவுகின்ற உத்தியோகத் தர்களின் தட்டுப்பாடு பரிசோதனை அலுவல்கள் தொடர்பாக ஏற்பட்டிருந்த வரையறையான நிலைமைகளில் பிடித்தல் இலக்குகளை திருத்துவதற்கு மேற்கொள்ளப் பட்டிருந்த பிரதிநிதித்துவத்தின் படி இலக்காகிய எண்ணிக்கையை விட பிடித்தல்கள் குறைந்திருந்தது. வழமையான	2024 இற்காக 2023 ஆண்டின் மதிப்பீட்டின் படியே திட்டமிடப்பட்டுள்ள 4,000 பிடித்தல்கள் 2,385 பிடித்தல்கள் எனப்படும் 59 சதவீதம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பிரதான வகையைச் சேர்ந்த குற்றங்கள் அடங்கும் விதத்தில் பிடித்தல்கள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

கொண்டிருந்த பொறிமுறைக் குற்றம் பிடித்தல்கள் 1,559 இன் தண்டப் பணப் பகுப்பாய்வின் படி 65 சதவீதத்தில் சாதாரண வகையைச் சேர்ந்த நிபந்தனைகளை மீறல்களுக்குரிய சுற்றிவலைப்புக்களாகும்.

நிபந்தனைகளை மீறல்கள் அனேகமாக நடைபெறுவதுடன், முக்கிய வகையான நிபந்தனைகளை மீறல் சொற்ப அளவிலேயே நடைபெறுகின்றது.

3.31 இலங்கை மின்சார சபை ஊழியர் சேமலாப நிதியம்

	மொத்த சொத்துக்கள்	மொத்த பொறுப்புகள்	மூலதனம	வரிக்கு முன்னைய இலாபம்/(நட்டம்)	கணக்காய்வு அபிப்பிராயம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	
2021	73,985,427,313	877,169,992	73,108,257,320	4,672,608,058	முனைப்பழியற்ற
2022	87,243,763,180	802,391,604	86,441,371,576	9,742,206,300	முனைப்பழியுள்ள
2023	96,408,654,994	1,656,884,047	94,751,770,947	13,294,852,358	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளருயைய பரிந்துரைகள்	நிறுவனத்தால் எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கை	பரிந்துரைகளை அமுலாக்கலின் தற்போதைய நிலை
(அ)	நீக்கப்பட்ட மற்றும் பதவிவறிதாக்க்கப்பட்ட உறுப்பினர்களின் தீர்க்கப்படாத மீதி காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகளிற்கு மேலாக உறுப்பினர்களின் மீதிகளிற்கு எதிராக வழங்கப்பட்ட கடன்களிற்கு 128 செயற்பாடற்ற உறுப்பினர்களிடமிருந்து ரூபா 19.06 மில்லியன் தொகை பெற வேண்டியிருந்தது. அந்த தொகையில் 34 செயற்பாடற்ற உறுப்பினர்களிற்கு சொர்தமான ரூபா 9.5 மில்லியன் தொகை மற்றும் 86 செயற்பாடற்ற உறுப்பினர்களிற்கு சொந்தமான ரூபா 2.4 மில்லியன் முறையே 7 ஆண்டுகள் மற்றும் 31 ஆண்டுகளிற்கு மேலாக பெறவேண்டியிருந்தது.	2022-1.6.1 2023-1.6.1	செயற்பாடற்ற உறுப்பினர்களின் நீணடகால கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.	செயற்பாடற்ற உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் எங்களுடைய கணக்கேடுகளில் பதியப்பட்டுள்ளதுடன் செயற்பாடற்ற உறுப்பினர்களின் இறுதி தீர்ப்பனவை செய்வதற்கு தீர்ப்பனவு காலத்தில் தெளிவாக்கப்பட வேண்டும்.	பரிந்துரைகள் இன்னமும் அமுலாக்கப்படாமையால் நிலையில் எவ்வித மாற்றமுமில்லை

(ஆ)	உரிய உறுப்பினர்களின் மீதிகளை விடுவிப்பதற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காமையால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகளிற்கு மேலாக 588 நீக்கப்பட்ட உறுப்பினர்களிற்கு சொந்தமான ரூபா 107 மில்லியன் தொகை செலுத்த வேண்டியிருந்தது. அவற்றில் 307 நீக்கப்பட்ட உறுப்பினர்களிற்கு சொந்தமான ரூபா 56.8 மில்லியன் தொகை மற்றும் 124 நீக்கப்பட்ட உறுப்பனர்களிற்கு சொந்தமான ரூபா 1.9 மில்லியன் தொகை முறையே 7 ஆண்டுகள் மற்றும் 31 ஆண்டுகளிற்கு மேலாக செலுத்த வேண்டியிருந்தது.	2021 - 1.6 (உ) 2022 - 1.6.2 (அ) 2023- 1.6.2 (அ)	நீண்ட காலம் நிலுவையாகவ ிருக்கின்ற உறுப்பினர்களி ன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இந்த மீதிகள் உரிய உறுப்பினர்களின் மீதிகளை விடுவிப்பதற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காமையால் நிதியத்தின் நிதிக் கூற்றுக்களில் பொய்யாக உள்ளது. ஆகவே, அந்த மீதிகள் இன்னமும் நிதியத்தின் பொறுப்பாக உள்ளமையால் பதிவழிக்க முடியாதுள்ளது.	பரிந்துரைகள் இன்னமும் அமுலாக்கப்படாமை யால் நிலையில் எவ்வித மாற்றமுமில்லை
(இ)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 305 பதவி வறிதாக்கப்பட்ட உறுப்பினர்களிற்கு சொந்தமான ரூபா 5.1 மில்லியன் மொத்த தொகை 6 ஆண்டுகளிற்கு மேலாக செலுத்த வேண்டியிருந்தது.	2023- 1.6.2 (ஆ)	நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற உறுப்பினர்களி ன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இது இறுதி தீர்ப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்படும் நேரம் தெளிவாக்கப்படும்.	பரிந்துரைகள் இன்னமும் அமுலாக்கப்படாமை யால் நிலையில் எவ்வித மாற்றமுமில்லை
(ஈ)	ஊழியர் சேமலாப நிதிய பிரமாணங்களின் 4 ஆம் விதியின் பிரகாரம், ஒவ்வொரு உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களும் ஊழியர்களுடைய சம்பளங்கள் அல்லது கூலிகளிலிருந்து முறையே 10 சதவீதம் மற்றும் 15 சதவீதம் நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்பட வேண்டும். அடிப்படைச் சம்பளத்தின் வரையறைக்கு முரணாக அதேநேரம் நிதியத்திற்கான பங்களிப்பை கணிப்பீடு செய்கின்றது. CEB ஊழியர்களின்	2021 – 1.7 (அ) (i) 2022 – 1.7 (அ) (i) 2023 – 1.7 (அ) (i)	சேமலாப நிதிய பிரமாணங்களு டன் இணங்கியொ ழுக வேண்டும்.	ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு கணிப்பீடு செய்ப்படுகின்ற போது 2007 ஒக்தோபர் 23 ஆந் திகதிய DGM(P)/Policy/G S(1)/181 ஆம் இலக்க ஆளணிச் சுற்றறிக்கைக்கமை ய திரண்ட சம்பளத்தின் ஒரு பகுதியாக உயர்ந்த படிகள்	பரிந்துரைகள் இன்னமும் அமுலாக்கப்படாமை யால் நிலையில் எவ்வித மாற்றமுமில்லை

